RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 21 ஏப்ரல் 2023 இதழ்:- 52

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan LL.B
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 30வது ஆண்டு விழாவில் கலந்து கொள்ள ரொறன்ரோ வருகை தந்துள்ள கலைமாமணி ராஜேஸ் வைத்தியா

23 ஏப்ரல் 2023 மாலை 6.00 மணிக்கு 5183 Shepparad Ave East இல் அமைந்துள்ள Chinese Cultural Centre இல் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 30வது ஆண்டு விழாவில் கலந்து கொள்வதற்காக 17 ஏப்ரல் 2023 திங்கட்கிழமை கனடா வந்துள்ள வீணை இசை வேந்தன் கலைமாமணி ராஜேஸ் வைத்தியா அவர்கள்.

சொற்ப டிக்கட்டுக்களே இருப்பதால் நாளை மதியத்திற்கு முன்னதாக பரமேஸ் 416 841 9600 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். இன்றேல் அரங்க வாசலில் பெற்றுக் கொள்ளுங்கள். நன்றி!



Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances,
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

# சிலைகளின் ஆக்கிரமிப்பு தீர்வைத் திசை திருப்புவா?



திடீரென வைக்கப்படும் சிலைகள் தான் யாழ்ப்பாணத்தை இப்போது பேசு பொருளாகியிருக்கின்றது. குறிப்பிட்ட ஒரு நிலப்பரப்பை யாருடைய ஆளுகைக்குட்பட்டது என்பதை உறுதிப்படுத்துவதற்கான தொல்லியல் ஆதாரங்களில் ஒன்றாக சிலைகள் அல்லது சிதைவுகள் கருதப்படுகின்றது. இந்தப் பின்னணியில் தான் சிலைகள் தகர்க்கப்படுவதும் புதிய சிலைகள் இரவோடிரவாக வருவதும் இடம் பெறுகின்றது. மக்கள் அனைவரும் எல்லாவற்றையும் மறந்து போய் இப்போது சிலைகளுக்குப் பின்னால் ஓடிக் கொண்டிருக்கின்றார்கள்.

(18ம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா என்ற பெயர் மாற்றமே நாட்டின் அழிவுக்குக் காரணம் வானியலாளர் அனுர சி பெரேரா

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE


THINKING OF
SELLING OR BUYING A HOME?
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Team SIVA
WILL BRING THE BEST RESULTS!
Piravien Siva
B.Comm.
Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com
20 Years Real Estate Experience
HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
HOMELIFE
HIGHER STANDARDS
Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Lawrence/ Galloway
Scarborough $499,900
Bedrooms: 4 Washrooms: 2
Close To Shopping, Hospitals
Finch & Pharmacy
Scarborough $543,900
Bedrooms: 2 Washrooms: 1
Large Open Concept Area
Yonge/Finch
Toronto $579,000
Bedrooms: 1 Washrooms: 1
Luxurious Bright & Spacious unit
Bowmanville /Northglen
Clarington $699,000
Bedrooms: 3 Washrooms: 3
Brand New Townhouse
Eglinton/Markham
Scarborough $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Low Maintenance Free
Queens Quay & Lower Sherbourne
Toronto $874,900
Bedrooms: 2 Washrooms: 2
Waterfronts Luxury Corner unit
Steeles/Mclaughlin
Brampton $1,100,000
Bedrooms: 3 Washrooms: 3
A Quiet Family Neighborhood
River Street & Highway 12
Brock $1,350,000
Bedrooms: 5 Washrooms: 4
Walkout Basement
Meadowvale / 401
Scarborough $1,998,786
Bedrooms: 4+3 Washrooms: 5
Open Concept Layout.
Sandalwood & Richvale
Brampton $675,000
Bedrooms: 3 Washrooms: 2
Call for more info
Eglinton/Sloane
Toronto $539,000
Bedrooms: 1 Washrooms: 1
Doubble Closet & Open Balcony.
Danforth & Eglinton Ave
Toronto $456,500
Bedrooms: 1 Washrooms: 1
Open Concept With Modern Kitchen
Keele/Sheppard
Toronto $810,000
Bedrooms: 3 Washrooms: 2
Bungalow-Raised Excellent Property
Mccowan & Ellesmere
FOR LEASE
Scarborough $3,200
Bedrooms: 3 Washrooms: 1
Hardwood Floors Throughout
Liverpool & Commerce S
FOR LEASE
Pickering $2,700
Bedrooms: 3 Washrooms: 1
Close To Parks
Birchmount/Ellesmere
FOR LEASE
Scarborough $2,400
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Unit With Parking
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# தமிழருக்கு உரிமைகள் வழங்கத் தேவையில்லை! மீறினால் வரலாறு காணாத இனக்கலவரம் வெடிக்கும்

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப் பட்டால் இலங்கை வரலாற்றில் முன்னெப் போதும் இல்லாத இனக் கலவரம் வெடிக்கும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சரவை உபகுழுவை நிய மித்து 13ஆம் திருத்தத்தை நடை முறைப்படுத்த ரணில் அரசாங்கம் வகுத்துள்ள வியூகத்தை தாம் கடுமை யாக எதிர்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம் பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாற தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தொடர்ந்தும் அவர் கருத் துத் தெரிவிக்கையில்,

நல்லிணகத்தை 3 கட்டங்களாக ஏற்படு த்துவதற்காக அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திரு ந்தார். அதில், 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறை ப்படுத்துவதும் உள்ளடங்குகின்றது.



இதனைக் கைவிட வேண்டும். அதனையும் மீறி முழுமையாக நடை முறைப்படுத்த எத்தனித்தால் நாட்டில் என்றுமில்லாத வகையில் பாரிய இனக் கலவரம் வெடிக்கும். ஆகவே அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை எக்காரணம் கொண்டும் முழுமையாக நடைமுறைப்படுத்த நாம் அனுமதிக்கமாட்டோம்.

தமிழ் மக்கள் சிங்கள மக்களைப் போல் சகல உரிமைகளுடனும் சுதந்திரமாக வாழ் கின்றார்கள். எனவே 13 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக அவர்களு க்கு நேரடி உரிமைகள் வழங்க வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சீனாவின் எந்தவொரு அமைப்பும் இலங்கைக் குரங்குகளைக் கேட்கவில்லை



ஒரு இலட்சம் குரங்குகளை இலங்கையின் எந்த தரப்பினரிட மும் கோரவில்லை என இலங்கை க்கான சீன தூதரகம் கூறியுள்ளது. இது தொடர்பிலான தெளிவுபடுத் தலை இலங்கைக்கான சீன தூதர கம் தனது டுவிட்டரில் பக்கத்தில் பதிவிட்டுள்ளது.

சீனாவில் உள்ள வன விலங்குகள், தாவரங்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதியை மேற்பார்வை செய்யும் பிரதான அரசாங்கத் திணைக்களங் களான சீன தேசிய வனவியல் மற்றும் புல்வெளி நிர்வாகத்திடம் இவ்விடயம் தொடர்பில் தாம் வினவியதாகவும் அவர்கள் இதனை அறிந்திருக்கவில்லை என தெரிவித் ததாகவும் சீன தூதரகம் அறிவித் துள்ளது. உலகளவில் அழிந்து வரும் உயிரினங்கள் மற்றும் தாவரங்களின் சர்வதேச வர்த்தகம் தொடர்பான மாநாட்டின் ஒரு பங்காளியான சீனா வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தை பல திருத் தங்களுடன் நிறைவேற்றியுள்ளதாக சீன தூதரகம் மேலும் கூறியுள்ளது.

வனவிலங்குகளின் பாதுகாப்பிற்கு சீன அரசாங்கம் அனைத்து சந்தர்ப் பங்களிலும் முன்னுரிமை கொடுப்ப தாகவும், அதற்காக சர்வதேச கடமைகளை தீவிரமாக நடை முறைப்படுத்துவதாகவும் சீன தூதரகம் வெளியிட்டுள்ள டுவிட் டரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அம்மன் சிலை வழக்கு ஒத்தி வைப்பு!

பண்ணையில் அமைக்கப்பட்ட நயினாதீவு நாகபூசணி அம்மனை பிரதிபலிக் கும் சிலையை அகற்றுவது தொடர்பான வழக்கை மேல் நீதிமன்றம் எதிர் வரும் மே 04ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை விசாரிக்கப்பட்ட இந்த வழக்கில் இந்து அமைப்பு களின் பிரதிநிதிகள் சார்பில் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத் தரணியுமான எம். ஏ. சுமந்திரன், என். சிறீகாந்தா உள்பட 15 வரையான சட்டத் தரணிகள் முன்னிலையாகினர்.

முறைப்பாட்டாளர் இன்றி பொலிஸார் இந்த வழக்கை தொடுக்க உரிமை இல்லை என்ற கருத்தை சட்டத்தரணி சுமந்திரன் முன்வைத்து வாதத்தை தொடக்கினார். தொலைபேசி மூலம் தமக்கு முறைப்பாடு கிடைத்ததாகவும் வன்முறைகள் ஏதும் ஏற்படக்கூடாது என்று தெரிவித்தே தாம் வழக்கு தொடு த்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து சட்டத்தரணிகள், சுமந்திரன், சிறீகாந்தா ஆகியோர் வாதங்களை முன்வைத்தனர்.

சிலை வைக்கப்படுவதில் தமக்கு ஆட்சேபனை (17ம் பக்கம் பார்க்க)

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**


**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# WORK WITH THE BEST TEAM GET YOUR HOME SOLD!

#1 HOMELIFE TEAM IN ONTARIO

SIVA & JOY

KNOWLEDGE • EXPERIENCE • SUCCESS

## ASSIGNMENT SALE
PINNACLE TORONTO EAST CONDOS




$589,900






- 1 Bedroom+Den
- 1 Bathroom
- 651 Sq Ft
- 1 Parking+ 1 Locker

## ASSIGNMENT SALE
THE LANDING CONDOS





**Whitby**
Victoria St W/Brock St S

- 2 Bedroom+Den
- 2 Bathroom
- 854Sq Ft
- 1 Parking+ 1 Locker


**$760,000**
Occupancy September 25 2023

- Exciting opportunity to live near Whitby's waterfront
- Chance to live in a beautifully scaled condominium located by the lake
- Only a 3-minute stroll to the Whitby GO Station
- Quick access to Highway 401 and 412 allowing for easy commutes


# UNION CITY in MARKHAM




## DEPOSIT STRUCTURE
$10,000 at Signing
Balance to 5% in 30 Days
5% on April 1, 2024
2.5% on October 1,2024
2.5% on April 1, 2025
5% on Occupancy



## FROM MID $400S




Minutes away from CF Markville Mall
Highway 404 just 4 minutes away
Highway 407 just 2 minutes away
Just steps away from Unionville GO Station
Close to York University Markham Campus





**SASIKUMAR SHANMUGANATHAN**
BROKER

**SIVA SHANMUGANATHAN**
BROKER

**JOY SELVANAYAGAM**
BROKER

**416.709.5000** **416.545.7482**

**www.futuregtahomes.com**

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife/Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
Bus: 905.201.9977

# ஸ்ரீலங்கா என்ற பெயர் மாற்றமே நாட்டின் அழிவுக்குக் காரணம் என்கிறார் வானியலாளர்



ஸ்ரீ என்ற துரதிஷ்டமான சொல்லின் காரணமாகவே, 'சிலோன்' என்பதிலிருந்து ஸ்ரீலங்கா என பெயர் மாற்றம் பெற்றது முதல் கடந்த தசாப்தங்களாக நாடு முற்றிலும் அழிவை சந்தித்து வருவதாக விஞ்ஞான எழுத்தாளரும் வானியலாளருமான அனுர சி. பெரேரா தெரிவித்துள்ளார்.

எஸ்.டபிள்யூ .ஆர்.டி. பண்டாரநாயக்க மற்றும் விஜய குமாரதுங்க ஆகியோரின் படுகொலையிலிருந்து, வங்குரோத்தான நிறுவனங்கள் வரை ஸ்ரீ என்ற வார்த்தை ஒரு பேரழிவு விளைவை ஏற்படுத்தியது. இலங்கையின் கடைசி மன்னன் கூட ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் என்று அழைக்கப்பட்டான் என்று அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில், நாடு, தலைவர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் அரச நிறுவனங்களின் பெயர்களுக்கு முன்னால் 'ஸ்ரீ' என்ற சொல்லை பயன்படுத்துவது நாட்டின் வங்குரோத்து நிலைக்கு காரணமாகியுள்ளது.

எஸ்.டபிள்யூ .ஆர்.டி. பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்ததன் மூலம் 1956 ஆம் ஆண்டு முதல் எமது நாடு துரதிர்ஷ்டத்தைப் பெற்றிருந்தது. அவர் வாகன இலக்கத் தகடுகளில் ஸ்ரீ என்ற சொல் அல்லது எழுத்தை சேர்த்ததன் பின்னர் நாட்டில் சிங்கள, தமிழ் சமூகங்களுக்கு இடையில் மோதலை ஏற்படுத்தினார்.

இந்த மோதலின் போது, நாடு பெருமளவிலான உயிர் இழப்புகள் மற்றும் சொத்து சேதங்களை சந்தித்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகர் பின்னர் பிக்கு ஒருவரால் படுகொலை செய்யப்பட்டார். ஸ்ரீலங்கா ஷிப்பிங் கம்பனி லிமிடெட், ஸ்ரீலங்கா ரயில்வே (SLRD), மத்திய வங்கி மற்றும் போக்குவரத்து சபை (ழ஡வுட) போன்ற பல அரச நிறுவனங்கள் ஸ்ரீ என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதால் அவை வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா என்று பெயரிடப்படுவதற்கு முன்னர் எமது நாடு லங்கா, சிங்களே, தம்பபன்னி, செரண்டிப், தப்ரபேன், சைலான், சிலோன், ஹெலதிவ, தஹம் திவயின, அல்லது லக்பிம என அழைக்கப்பட்டது. ஸ்ரீ என்ற வார்த்தை பயன்படுத்தப்படவில்லை,'' என்று அவர் தெரிவித்தார். இந்த வார்த்தையின் வீரியத்தை நான் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு தெரிவிக்க விரும்புகிறேன் என்று பெரேரா கூறியுள்ளார்.

பிரித்தானிய டொமினியன் அந்தஸ்தை நீக்கி, 1972 இல் புதிய அரசியலமைப்புடன் குடியரசாக மாறிய பின்னர், இலங்கை தனது அரசியல் மற்றும் பொருளாதாரத்தை விஸ்தரிக்க ஆரம்பித்ததாக நம்பும் இலங்கையர்களின் குழு மத்தியில் ஒரு கருத்து உள்ளது, அது நாட்டின் பெயரை அதிகாரப்பூர்வமாக மாற்றியது.

90 களின் முற்பகுதியில், ஜனாதிபதி பிரேமதாச ஆங்கில Sri என்பதற்கு பதிலாக Shri என்று மாற்றி இதை சரிசெய்ய முயன்றார். ஏனென்றால், ஜனாதிபதி பிரேமதாஸவிடம் இந்த பெயர் அரச தலைவருக்கு துரதிர்ஷ்டம் என்று ஒரு ஜோதிடர் கூறியதாக கூறப்படுகிறது. எனவே அவர் நாட்டின் உத்தியோகபூர்வ பெயரை "SriLanka என்பதில் இருந்து "Shri Lanka" என்று அரசியலமைப்பு அதிகாரம் இல்லாமல் மாற்றினார். மாற்றப்பட்ட எழுத்துப்பிழை ஒரு நினைவு நாணயத்தில் மட்டுமே காணலாம். 1993 மே முதலாம் திகதி ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச படுகொலை செய்யப்பட்ட பின்னர் விரைவில் எழுத்துப்பிழை மாற்றப்பட்டது. ஜீன் 1992 மற்றும் டிசம்பர் 1993க்கு இடையில் வெளியிடப்பட்ட முத்திரைகளில் மட்டுமே Shri என்ற சொல் பயன்படுத்தப்பட்டது என்று ஒரு அறிக்கை கூறுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நான் ஆரம்பித்ததை ஜனாதிபதி தொடர்கின்றார்



நான் ஆரம்பித்து வைத்ததை ஜனாதிபதி தொடர்கின்றார் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக சர்வதேச நாணயநிதியத்துடனான ஈடுபாடுகள் ஒரு சிறப்பான வெற்றிகரமான முயற்சியாக காணப்படும் எனவும் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார்.

நாடு மிகமோசமான நெருக்கடியை எதிர்கொண்ட காலத்தில் நான் நிதியமைச்சராக பணியாற்றினேன் என தெரிவித்துள்ள அலிசப்ரி நானே சர்வதேச நாணயநிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தேன் ஜனாதிபதி அதனை தொடர்ந்து முன்னெடுத்தார் என குறிப்பிட்டுள்ளார்

சர்வதேச நாணயநிதியத்துடனான எங்களின் ஈடுபாடு மிகப்பெரிய வெற்றியாக அமையும் என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எங்கள் பொருளாதாரத்தை பொருத்தவரை நாங்கள் சரியான பாதையில் பயணிக்கின்றோம் எங்கள் பொருளாதாரம் மீண்டும் இயங்கதொடங்கியுள்ளது உள்நாட்டு யுத்தம் கொவிட் பொருளாதார வீழ்ச்சி காரணமாக நாங்கள் பெரும் சவால்களை எதிர்கொண்டோம் என தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் அரசாங்கம் வடக்கை சேர்ந்த 12000 இளைஞர்களிற்கு மறுவாழ்வளித்தது, இந்த இளைஞர்களை அரசாங்கம் பராமாக்கின்றது அவர்களிற்கு நிதி உதவியை வழங்குகின்றது அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கு நாங்கள் ஆதரவளிக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மிக நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்ட வடக்கு கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கு எங்களிற்கு சர்வதேசஉதவிகள் தேவை என தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் நாங்கள் இந்தியாவுடன் மேலும் ஒன்றிணைவை ஏற்படுத்த முயற்சிக்கின்றோம், இதனடிப்படையில் நாங்கள் இந்தியாவுடனான விமானசேவைகளை அதிகரிக்க முயல்கின்றோம் நாங்கள் விரைவில் இந்தியா இலங்கை படகுச்சேவையை ஆரம்பிப்போம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தனியொரு பிராந்திய கூட்டமைப்புடன் மாத்திரம் இணைந்து செயற்பட விரும்பவில்லை நாங்கள் சீனாவுடன் மேற்குலக மத்திய கிழக்கு நாடுகளுடன் வர்த்தகத்தில் ஈடுபடவிரும்புகின்றோம், எனவும் அவர் தெரிவித்துள்ளார்.






# சஜித் - ரணில் கூட்டு?

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியையும் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் ஆகியோர் ஈடுபட்டுவரும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இவ்வாறான முயற்சிகள் இடம் பெறுவது ஆச்சரியமானதல்ல எனினும் சஜித் பிரேமதாச இது தொடர்பில் சாதாகமான பதிலை இதுவரையில் வழங்கவில்லை. அடுத்த ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து பல்வேறு நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் ஒன்றுதான் ரணிலையும் சஜித்தையும் ஒன்றிணைப்பதற்கான முயற்சி.

இது ஒருபுறம் என்றால், மறுபுறும் பசில் ராஜபக்சவின் தலைமையில் பிறிதொரு நகர்வு முன்னெடுக்கப்படுகின்றது. ரணில் விக்கிரமசிங்கவை, ஒரு வேட்பாளராக நிறுத்துவதற்கான முயற்சிகள் பல்வேறு வழிகளிலும் முன்னெடுக்கப்படுகின்றன.

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி மோசமான பின்னடைவு நிலையில் இருக்கின்றது. அதனை தூக்கி நிறுத்துவது இலகுவான காரியமாகவும் தெரியவில்லை தவிர அவ்வாறான முயற்சியில் ரணில் விக்கிரமசிங்கவும் ஈடுபடுவதாக தெரியவில்லை. ஒருவேளை அவருக்கு விசுவாசமானவர்கள் ஈடுபடலாம். ஆனால் பொருளாதார நெருக்கடி ரணில் விக்கிரமசிங்கவை பலமானதொரு நபராக மாற்றியிருக்கின்றது.

இந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதியாக வருவதற்கான ஜன வசியத்தை ஓரளவு பெற்றிருக்கின்றார். இந்த ஜன வசியம் என்பது ரணிலின் மீதானது என்பதல்ல மாறாக, குறிப்பிட்ட சூழலானது, அவ்வாறானதொரு அபிப்பிராயத்த ஏற்படுத்தியிருக்கின்றது.

ஏனெனில் ரணில் என்ன தான் ஆற்றலுள்ளவராக இருந்தாலும் கூட அவரை பெரும்பான்மையான சாதாரண சிங்கள மக்கள் தங்களுக்குரியவராக நோக்கவில்லை. இதன் காரணமாகத் தான் கடந்த காலங்களில் ஆற்றலுள்ள ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைய நேரிட்டது.

2005இல் தமிழ் முஸ்லிம் மக்களின் ஆதரவுடன் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பை ரணில் பெற்றிருந்தாலும் கூட விடுதலைப் புலிகளின் தேர்தல் பகிஷ்கரிப்பால், அது கைகூடவில்லை.

ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிட்டால் தோல்வியடைந்து விடுவார் என்னுமடிப்படையில் தான், 2009இற்கு பின்னர் இடம் பெற்ற எந்தவொரு ஜனாதிபதி தேர்தலிலும் அவர் வேட்பாளராக நிறுத்தப்படவில்லை. அவர் மற்றவர்களுக்கே ஆதரவு வழங்கினார்.

ஏனெனில் 2009இற்கு பின்னரான யுத்த வெற்றிவாத ஜன வசியத்தை உடைக்கக் கூடிய ஒரு சிங்களத் தலைவராக ரணில் இருக்கவில்லை. அரசியல் அனுபவத்தில் ஆற்றலில், சர்வேதேச தொடர்புகளில் ரணிலுக்கு அருகில் கூட நிற்க முடியாதவர்கள் தான் ஜனாதிபதி கதிரையை அலங்கரித்தனர். ஆனால் பொருளாதார நெருக்கடி யுத்த வெற்றிவாத நாயகர்களை பெருமளவில் வீழ்ச்சியுறச் செய்திருக்கின்றது. இவ்வாறானதொரு சூழலில் யுத்த வெற்றி வாதம் அடுத்த தேர்தலில் பிரதான விடயமாக இருக்காது, இருக்கவும் முடியாது.

இப்போது பொருளாதார வெற்றிக்கு உரிமை கோரும் அரசியலே தென்பகுதியை ஆட்கொள்ளப் போகின்றது. இவ்வாறானதொரு சூழலில் தான் ரணில் விக்கிரமசிங்க தனித்துத் தெரிகின்றார். நெருக்கடியான காலகட்டமொன்றை தாண்டுவதற்கு தலைமை தாங்கியவர் என்னும் வகையில் அவர் தொடர்ந்தும் கதிரையில் இருக்க வேண்டிய தேவையிருப்பதாக சிங்களவர்களும் சிந்திக்கும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

நிலைமைகள் இவ்வாறிருந்த போதும், ரணிலின் வெற்றிக்கு பலமானதொரு அரசியல் கூட்டணி தேவை. ஏனெனில் பாராளுமன்றத்தை கட்டுப்படுத்த முடியாத ஜனாதிபதியாக இருப்பதன் மூலம் ரணிலால் விடயங்களை முன்னெடுக்க முடியாது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் ரணிலை சுற்றி பலமானதொரு சுவரை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் தீவிரமடைந்திருக்கின்றன. ஆனால் சஜித் பிரேமதாச இதற்கு இணங்குவாரா என்பதில் சந்தேகங்கள் உண்டு. அவருக்கும் ஜனாதிபதி கனவுண்டு. இந்த நிலையில் ரணிலுடன் கூட்டுச் சேர்ந்தால் தனது நகர்வுகள் சீர்குலைந்துவிடுமென்று அவர் எண்ணக் கூடும். ஆனால் சஜித்தால் தனித்து ஜனாதிபதியாகுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் தெரியவில்லை. எவ்வாறாயினும் அடுத்த ஜனாதிபதி தேர்தலை முன்வைத்தே அனைத்தும் நகரப்போகின்றது.

# கனடா ஐயப்பன் கோவில் குருசாமியை அனலைதீவில் வைத்து வாளால் வெட்டி கொலை செய்ய முயற்சித்த 2 பேர் கைது!

கனடாவிலிருந்து சென்று அனலைதீவில் தனது வீட்டில் தங்கியிருந்த கனடா ஐயப்பன் இந்து ஆலய குருசுவாமியை திட்டமிட்டு கொலை செய்ய முயற்சித்தமை மற்றும் பெறுமதியான பொருள்களை கொள்ளையிட்டமை தொடர்பாக முதன்மை சந்தேக நபர் உள்ளிட்ட இருவர் இலங்கைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.



அவரைக் படுகொலை செய்வதற்காக கனடாவிலிருந்து பணம் அனுப்பப்பட்டு இந்தியாவிலிருந்து வழங்கப்பட்ட நட்பு ரீதியான கட்டளையில் இந்தக் குற்றம் செய்யப்பட்டதாக சந்தேக நபர்களினால் வாக்குமூலம் வழங்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையைச் சேர்ந்த 32 மற்றும் 24 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த பெப்ரவரி 23ஆம் திகதி அனலைதீவில் வீடு புகுந்த வன்முறைக் கும்பல் அங்கு தங்கி இருந்த குருசுவாமி நாகலிங்கம் சுப்பிரமணியம் அவரது துணைவியார் இருவர் மற்றும் ஆசிரியர் உள்ளிட்ட மூவரை கடுமையாகத் தாக்கி 4 பெறுமதியான அலைபேசிகள் மற்றும் 4 வலையல்கள் உள்ளிட்ட 13 லட்சம் பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டன.

சம்பவத்தில் கனடாவில் வசிக்கும் அனலைதீவைச் சேர்ந்த நாகலிங்கம் சுப்ரமணியம் (குருசாமி வயது 75) என்பவர் கால்கள் அடித்து முறிக்கப்பட்டு படுகாயமடைந்தார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று கனடா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். தற்போதும் கனடாவில் மருத்துவமனையில் தங்கி இருந்து சிகிச்பை பெற்று வருகின்றார். சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்த நிலையில் யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத்தின் உத்தரவில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான மாவட்ட குற்றத்தப்படுப்பு பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

விசாரணைகளின் அடிப்படையில் கடந்த மாதம் அரியாலை பூம்புகாரைச் சேர்ந்த 21 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் மேலதிக விசாரணைகளில் பருத்தித்துறையைச் சேர்ந்த 32 வயதுடைய முதன்மை சந்தேக நபர் மற்றும் 24 வயதுடையவர் என இருவர் கைது செய்யப்பட்டனர்.

கனடாவில் உள்ள ஒருவர் இந்தியாவில் வசிக்கும் ஒருவர் ஊடாக ஒருங்கிணைத்து இந்த தாக்குதலை திட்டமிட்டதாக முதன்மை சந்தேக நபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இந்தியாவில் வசித்த வரதன் என்பவர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துவிட்டார். அதனால் திட்டமிட்டபடி எதுவுமே செய்ய முடியவில்லை.

வேலனைக்குச்சென்று மீன்பிடிப் படகை வாடகைக்கு அமர்த்தி அனலைதீவு சென்று சொல்லப்பட்டவர் மற்றும் அவர் சார்ந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தினோம். நகைகள் மற்றும் அலைபேசிகளை எடுத்துக் கொண்டு தப்பி வந்து விட்டோம்' என்று முதன்மை சந்தேக நபர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். சந்தேக நபர்கள் இருவரிடமிருந்தும் கொள்ளையிடப்பட்ட தங்க வலையல்கள் மற்றும் மோதிரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மகன் தாக்கி தந்தை பலி! தாய் படுகாயம்!

கிளிநொச்சி தருமபுரம், மயில்வாகனபுரம் கொழுந்துப்புலவு பகுதியில் மகனால் தாக்கப்பட்ட தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

19 ஏப்ரல் 2023 அதிகாலை 1.00 மணியளவில் தந்தை தாய் மகனுக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பு காரணமாக மகனால் தாக்கப்பட்ட தந்தை படுகாயம் அடைந்த நிலையில் தருமபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது இடைநடுவே உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி தருமபுரம், மயில்வாகனபுரம் கொழுந்துப்புலவு பகுதியில் மகனால் தாக்கப்பட்ட தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார். அதிகாலை 1.00 மணியளவில் தந்தை தாய் மகனுக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பு காரணமாக மகனால் தாக்கப்பட்ட தந்தை படுகாயம் அடைந்த நிலையில் தருமபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது இடைநடுவே உயிரிழந்துள்ளார்.

தாயார் படுகாயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு 10 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துகள் கனடியத் தமிழர் பேரவையால் நன்கொடை!

கனடியத் தமிழர்கள் பத்து மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான உயிர் காக்கும் மருந்துப் பொருட்களை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு நன் கொடையாக வழங்கியுள்ளனர். கடந்த ஆண்டு கனடியத் தமிழர் பேரவையினால் (Canadian Tamil Congress - CTC) ஒழுங்கு செய்யப்பட்ட நிதிசேர் நடையூடாக திரட்டப்பட்ட நிதியின் இரண்டாவது நன்கொடை இதுவாகும், கடந்த ஆண்டு முதலாவது நன்கொடைத் தொகுதி தெல்லிப்பளை ஆதார வைத் தியசாலையிடம் கையளிக்கப்பட்டது. கனடியத் தமிழர் பேரவை தமது வருடாந்த நிதிசேர் நடையூடாக வருடந்தோறும் பல்வேறு தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடைகளை வழங்கி வருகின்றது.

இலங்கையின் மோசமான பொருளாதாரச் சரிவால் உயிர் காக்கும் மருந்துகளின் பற்றாக்குறையை நாட்டில் உள்ள அனைத்து மருத்துவமனைகளும் அதிகளவில் எதிர் கொண்டு வருகின்றன. இந்தச் சூழலைக் கருத் தில் கொண்டு மனிதநேய அடிப்படையில் 2022 ஆம் ஆண்டு கனடியத் தமிழர் பேரவையினரால் பதினான்கா வது வருடாந்த தமிழ்க் கனடிய நிதிசேர் நடைப ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் திரட்டப்படும் நன் கொடை மூலம் இலங்கையில் வடக்கு, கிழக்கு, மத்தி மற்றும் தெற்கு ஆகிய நான்கு பிராந்தியங்களில் உள்ள ஆறு மருத்துவமனைகளுக்கு உயிர் காக்கும் மருந் துப் பொருட்கள் வழங்குவதெனத் திட்டமிடப் பட்டது.

இந்த நன்கொடையின் இரண்டாம் கட்டமாக கனடியத் தமிழர் பேரவையினால் ஒழுங்கமைக்கப்பட்ட இரண் டாம் தொகுதி மருந்துப் பொருட்கள் ஏப்ரல் 12 புதன்



கிழமை அன்று 2:30 மணிக்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இயக்குனர் மருத்துவர் கலாரஞ்சனி கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த மருந்து பொறுப்பேற்றல் நிகழ்வில் கனடியத் தமிழர் பேரவையின் பிரதிநிதி மற்றும் மனிதாபிமான திட்டங்களின் இணைப்பாளர் துரைரத் தினம் துசியந்தன், புற்றுநோய் நிபுணர் மருத்துவர் யு இக்பால், நோயியல் நிபுணர் மருத்துவர் அகிலன் சின்னத்துரை மற்றும் பல மருத்துவ நிபுணர்கள், மருத்துவமனை நிர்வாக பொறுப்பதிகாரிகள், வைத்தி யர்கள், தாதியர்கள் மற்றும் பணியாளர்கள் என பலரும் கலந்து கொண்டு நிகழ்வினைச் சிறப்பித்தார்கள்.

எதிர்வரும் மாதங்களில் ஏனைய மருத்துவமனை களுக்குமான நன்கெடைகள் திட்டமிட்டபடி கனடிய தமிழர் பேரவையினால் ஒழுங்கமைக்கப்பட்டு கையளிக் கப்படும்.

# April Feast 2023 விழாவில் தகைசார் 4 பேருக்கு கௌரவ கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவிப்பு!



கடந்த 15 ஏப்ரல் 2023 சனிக்கிழமை 300 Water st - Whitby இல் அமைந்துள்ள பிரமாண்ட மான அரங்கத்தில் கனடாவில் பல்வேறு பிரபல தென்னிந்தியப் பாடகர்களை அழைத்து பல ஆண்டுகளாக நிகழ்வு களை நடத்தி வரும் சித்தப்பு என்று அன்பாக அழைக்கப்படும் திரு குகதாசன் அவர்களால் April Feast 2023 என்ற



ஓர் அருமையான இசை நிகழ்வு நடத்தப் பட்டது.

அரங்கு நிறைந்த மக்கள் மத்தியில் தென்னிந்திய பிரபல பாடகர்கள் மனோ, முகேஷ், சுர்முகி ஆகியோருடன் கனடாவில் வாழும் பாடகர் களும் இணைந்து பாடல்களைப் பாடி மகிழ் வித்தார்கள்.

சிறப்பு அம்சமாக நிகழ்ச்சியில் தாயகத்திலும் புலம் பெயர் தேசமான கனடா மண்ணிலும் கலைப்பணியாற்றி வரும் சங்கீதபூஷணம் பொன்.சுந்தரலிங்கம் அவர்கள் நாதஸ்வரக் கலை ஞர் நாகேந்திரன் அவர்கள் வானொலி மூலம் தமிழ்ப் பணியாற்றி வரும் திரு நடா. ராஜ்குமார் ஆகியோருடன் பாடகர் மனோ அவர்களுக்கும் RGU பல்கலைக்கழத்தின் கௌரவ கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

ஆற்றலும் தகுதியும் நிரம்பிய மகத்தான நான்கு பேருக்கு கௌரவ கலாநிதி பட்டம் வழங்கப் பட்ட போது அரங்கத்தில் உள்ளோர் கை களைத் தட்டி தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர். மாலை 6.30 மணி க்கு ஆரம்பித்த விழா இரவு 11.30 மணி வரை நீடித்த போதும் அரங்கத்தில் உள்ளோர் அனை வரும் இசை நிகழ்ச்சியை ரசித்த வண்ணமே இருந்தனர்.

மொத்தத்தில் இந்நிகழ்வு திரு குகதாசன் அவர் களை மக்கள் மத்தியில் மீண்டும் தூக்கி நிறுத்தி இருக்கின்றது. அதேவேளை மக்களும் ஏமாற்றமடையாமல் ஆத்ம திருப்தியோடு சென்றார்கள். பாராட்டுக்கள் சித்தப்பு!

# தமிழர்களுக்கான வெளிவிவகாரக் கொள்கை?

தமிழர்கள் ஒரு தேவையான மக்கள் கூட்டம். இந்தியாவின் தேசிய பாதுகாப்பு தமிழர்களில் தான் தங்கியிருக்கின்றது. இதனை சரியாகப் புரிந்து கொண்டு தமிழர்களுக்கான ஒரு வெளிவிவகாரக் கொள்கையை உருவாக்கிக்கொள்ள வேண்டும் பின் னர் அதனடிப்படையில் இந்தியா, அமெரிக்காவை கையாள வேண்டும். இவ்வாறு வாதிடும் சிலர் உண்டு. வெளிவிவகாரக் கொள்கையென்பது அரசு களுக்குரியது. அரசுகள் கடைப்பிடிக்கும் ஒன்றை எவ்வாறு அரசற்ற மக்கள் கூட்டமொன்று கைக் கொள்ள முடியும் அதிலும், ஆகக் குறைந்தது வடக்கு கிழக்கு தழுவியே தமிழர்கள் ஒரு நிலைப் பாடுடைய மக்கள் கூட்டமாக இல்லை அவர்களை ஒன்றாகத் திரட்டக் கூடிய ஆற்றலுள்ள தலைமையும் இல்லை.

கடந்த 13 வருடங்களில் அவ்வாறனதொரு தலை மைத்துவத்தை எந்தவொரு கட்சியும் நிரூபிக்க வில்லை. இந்த நிலையில் தமிழர்களுக்கான வெளி விவகாரக் கொள்கை தொடர்பில் பேசுவதை எவ்வாறு புரிந்து கொள்ளலாம்? இதனை கனவுலக சஞ்சாரம் என்பதா அல்லது அரசியல் விவகாரங்களை பொறுப் பற்று நோக்குவதன் விளைவென்பதா? ஏனெனில், சர்வதேச அரசியல் தொடர்பில் பேசுவது தமிழ் சூழலில் ஒரு வகையான நாகரிகமாகி விட்டது.

தமிழரசு கட்சியின் உருவாக்கத்துக்கு பின்னரான கடந்த 74 வருட கால தமிழ் அரசியல் வரலாற்றில் தமிழ் மக்கள் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மக்கள் கூட்டமாக வளர்ச்சியடையவில்லை. தங்களு க்கொரு சர்வதேச முக்கியத்துவம் இருப்பதாக யாழ்ப்பாணத்தின் ஒரு சிறிய குழுவினர் நம்பிக் கொண்ட போதிலும்கூட தமிழ் மக்களை அவ் வாறானதொரு தகுதி நிலையில் வெளியுலகம் நோக்கவில்லை.

அவர்கள் அவ்வாறு நோக்கவில்லை என்பதற்கு முள்ளிவாய்க்கால் அழிவு ஒரு சிறந்த உதாரண மாகும். உலகம் வேடிக்கை பார்த்துக் கொண்டி ருந்தபோது தான், யுத்த வலயத்திற்குள் அகப்பட்ட மக்கள் அழிந்து போயினர். தமிழ் மக்கள் உலகத் துக்கு தேவையான மக்கள் கூட்டமாக இருந்திரு ந்தால் ஏன் உலகம் அந்த அழிவை தடுத்து நிறுத்த வில்லை?

உலகம் முள்ளிவாய்க்காலை விடவும் மோசமான அழிவுகளை கண்டிருக்கின்றது. உதாரணமாக ருவாண்டாவில் 8 இலட்சம் மக்கள் நூறு நாட்களில் கொல்லப்பட்டனர். உலகம் அவர்களைக் காப்பாற்ற வில்லை. நினைத்திருந்தால் காப்பாற்றியிருக்க முடியும்? ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படை பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவர்கள் கொல்லப்பட்டனர். அவர்களை ஏன் உலகம் காப் பாற்றவில்லை? அப்போது ஐக்கியநாடுகள் சபையின் ருவாண்டா பணிக்கு பொறுப்பாக நியமிக்கப் பட்டிருந்த, ஐ. நா. அமைதிப் படையின் தளபதி இவ்வாறு பதிலளித்திருந்தார். ஒரு சிறிய ஆபிரிக்க நாட்டின் மக்களின் உயிர்கள் உலக மூலோபாய நலன் களுக்கு தேவைப்படவில்லை. இதனால் தான் உலகம் இந்த மக்களை காப்பாற்ற முயற்சிக்கவில்லை என்று அவர் கூறினார்.

இதே நிலைமை தான் தமிழ் மக்களின் நிலைமையும். ஆனால், ருவாண்டா மக்களுக்கு இல்லாத சில வாய்ப்புகளும் ஆதரவுத் தளங்களும் ஈழத் தமிழர்களு க்கு இருந்தது. ஈழத் தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பதற்கு மேற்குலக நாடுகளில் வாழும் பத்து இலட்சத்துக்கும் மேலான புலம்பெயர் மக்கள் இருந்தனர். மிக அருகில் 7 கோடிக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் தமிழ்நாட்டில் இருந்தனர். ஆனாலும் முள்ளிவாய்க்காலில் தமிழ்மக்கள் இறப்பதைத் தடுக்க முடியவில்லை. இது எதனை உணர்த்துகின்றது? இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ் மக்கள் மிக வும் பலவீனமான நிலையில் தான் இருக்கின்றனர். இவ்வாறானதொரு மக்கள் கூட்டமொன்று, தங்களு க்கான வெளிவிவகார கொள்கையை உருவாக்க முடியுமென்று வாதிடுவதும் அதனடிப்படையில் இந்தியாவை கையாளலாமென்று கூறுவதும் நகைச் சுவைகளேயன்றி வேறில்லை.

இவ்வாறு கூறுவதன் மூலம் தாங்கள் அறிவுபூர்வமாக சிந்திப்பதாக சிலர் எண்ணிக் கொள்ளலாம் – ஆனால் அவர்கள் தமிழ் மக்களை தொடர்ந்தும் முட்டாளா க்கும் பணிகளையே முன்னெடுத்துக் கொண்டிரு க்கின்றனர். தமிழர்களுக்கான வெளிவிவகாரக் கொள்கை என்பதெல்லாம் அறிவுபூர்வமான பார்வை யல்ல. இவ்வாறு கூறுபவர்கள் முதலில் வடக்கு கிழக்கின் இன்றைய நிலைமையை உற்றுநோக்கப் பழக வேண்டும். அவ்வாறு நோக்கினால் இது போன்ற கனவுலக கதைகளுக்கான அவசியமிருக் காது.

# யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த முதல் பிரதமர் நான் தான்! தமிழ் புத்தாண்டு விழாவில் இந்தியப் பிரதமர் மோடி பெருமிதம்!

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட முதல் பிரதமர் நான் தான் என இந்திய பிரதமர் நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்

தமிழ் புத்தாண்டை முன்னிட்டு மத்திய இணை அமைச்சர் முருகனின் டெல்லி இல்லத்தில், தமிழ் புத்தாண்டு கொண்டாட்டம் நடத்தப்பட்டது. பிரதமர் மோடி, ஆளுநர்கள் தமிழிசை மற்றும் சிபி ராதா கிருஷ்ணன், தமிழக பாஜக எம்எல்ஏ நயினார் நாகரேந்திரன், ஹெச்.ராஜா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

பட்டு வேட்டி, பட்டு சட்டை அணிந்து நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பிரதமர் மோடி தமிழ் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு தமிழர்களுக்கு வாழ்த்து தெரிவித்து தனது பேச்சை தொடங்கினார். இந்தியா உலகின் பழமையான ஜனநாயகம் மட்டுமல்ல, ஜனநாயகத்தின் தாயும்கூட. இதற்குப் பல வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. ஒரு முக்கியமான குறிப்பு தமிழகத்தில் உள்ளது. தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உத்திரமேரூரில் கண்டெடுக்கப்பட் 1,100-1,200 ஆண்டுகள் பழமையான கல்வெட்டுகள் நாட்டின் ஜனநாயக மதிப்பீடுகள் குறித்த அம்சங்களை வெளிப்படுத்துகின்றன.



அங்கு கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு கிராம சபைக்கான உள்ளூர் அரசியலமைப்பு போன்றது. இதில் பேரவையை எப்படி நடத்த வேண்டும், உறுப்பினர்களை தேர்வு செய்யும் முறை எப்படி இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி, அந்த கால கட்டத்தில், ஒரு உறுப்பினர் எப்படி தகுதி நீக்கம் செய்யப்படுவார் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது' என்று சமீபத்தில் அவதூறு வழக்கில்சூரத் நீதி மன்றத்தால் இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல்காந்தியை லோக்சபாவில் இருந்து தகுதி நீக்கம் செய்ததை குறிப்பிடும் விதமாக பேசினார்.

தொடர்ந்து, ஒரு நாடாக, இந்த கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை முன்னெடுத்துச் செல்வது நமது பொறுப்பு, ஆனால் இதற்கு முன்பு என்ன நடந்தது என்பதை நாம் அனைவரும் அறிவோம். எனினும், இப்போது எனக்கு இந்தப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது' என்றார்.

மேலும், 'உலகின் பழமையான மொழி தமிழ் என்பதில் ஒவ்வொரு இந்தியரும் பெருமை கொள்ள வேண்டும். சென்னையிலிருந்து கலிபோர்னியா வரை, மதுரையில் இருந்து மெல்போர்ன் வரை, கோயம்புத்தூரில் இருந்து கேப் டவுன் வரை, சேலத்தில் இருந்து சிங்கப்பூர் வரை என உலகின் எந்த நாட்டுக்குச் சென்றாலும் தமிழர்களை காணலாம். எந்த நாடுகளுக்குச் சென்றாலும், தமிழர்கள் தங்களின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்களையும் எடுத்துச் செல்கிறார்கள். அதனால்தான் பொங்கலாகட்டும், புத்தாண்டாகட்டும், தமிழ் பண்டிகைகள் உலகம் முழுவதும் கொண்டாப்படுகின்றன.

மன் கி பாத் நிகழ்ச்சியில் பல முறை பல சாதனை செய்த தமிழர்களை பற்றி பேசி இருக்கிறேன். ஐ.நா. சபையில் தமிழ் மொழியைப் பற்றிக் குறிப்பிட்டேன். தமிழ் இலக்கியமும் அதிகமாக மதிக்கப்படுகிறது. தமிழரின் பண்பு குறித்து தமிழ்த் திரையுலகம் நமக்கு பல படைப்புகளை வழங்கி உள்ளது.

இலங்கையில் யாழ்ப்பாணத்திற்கு பயணம் செய்த முதல் இந்திய பிரதமர் நான் தான். இலங்கையில் உள்ள தமிழர்கள் உதவிக்காகக் காத்திருந்தனர், எங்கள் அரசாங்கம் அவர்களுக்காக நிறைய செய்தது.

நான் யாழ்ப்பாணம் சென்ற போது அங்கு தமிழர்களுக்காக இந்திய அரசால் கட்டப்பட்ட வீடுகளை ஒப்படைக்கப்பட்டன. வீட்டில் நுழையும் முன் பால் காய்ச்சும் பாரம்பரிய சடங்கு, அதில் நானும் கலந்துகொண்டேன். அதன் வீடியோக்கள் தமிழ்நாட்டில் வெளியான போது தமிழ் மக்களிடம் இருந்து நான் நிறைய அன்பை பெற்றேன்.

எனது நாடாளுமன்றத் தொகுதியான வாரணாசியில் நடைபெற்ற காசி-தமிழ் சங்கமம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. காசிக்கும் தமிழகத்துக்கும் பழமையான வரலாற்று தொடர்புகள் உள்ளன. காசி நகரத்தில் உள்ள எந்தப் படகோட்டியிடம் பேசினாலும், அவருக்கு பல தமிழ் வாக்கியங்கள் தெரியும்.

காசி தமிழ் சங்கமத்தில், ஆயிரக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள தமிழ் புத்தகங்கள் வாங்கப் பட்டதும், பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தில் பாரதியார் இருக்கை நிறுவப்பட்டதும் மகிழ்ச்சி அளிக்கிறது' என்று தமிழகம் மற்றும் தமிழர்கள் குறித்தும் பிரதமர் மோடி நெகிழ்ந்து பேசினார்


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




# உண்மை நல்லிணக்கம் ஆணைக்குழு விவகாரம்:- அரசாங்கத்தின் பின்னணி குறித்து அரசியல் கட்சிகள் சந்தேகம்

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் உடனடியாகவே உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபித்திருக்க வேண்டும்.

இருப்பினும் தாமதமாகவேனும் இந்த ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் முயற்சிகளை வரவேற்பதாகத் தெரிவித்துள்ள தென்னிலங்கை அரசியல் கட்சிகள், இருப்பினும் இதன் பின்னணியிலுள்ள அரசாங்கத்தின் நோக்கம் குறித்து சந்தேகத்தை வெளிப்படுத்தியுள்ளன.

மூன்று தசாப்த காலமாக நாட்டில் இடம்பெற்ற ஆயுதமோதலின் போது பதிவான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உரியவாறான விசாரணைகளை முன்னெடுத்து நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலைநாட்டுமாறு சர்வதேச சமூகம் இலங்கையைத் தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் தென்னாபிரிக்காவில் ஸ்தாபிக்கப்பட்டதையொத்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை இலங்கையில் ஸ்தாபிப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துவருகின்றது.

அரசாங்கத்தின் காலம் கடந்த இம்முயற்சியை வரவேற்பதாகத் தெரிவித்துள்ள தென்னிலங்கை அரசியல் கட்சிகள், இருப்பினும் இந்த நடவடிக்கையின் உண்மையான நோக்கம் குறித்தும், இதனூடாக அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் பெறுபேறு கிட்டுமா என்பது குறித்தும் தமது சந்தேகத்தை வெளிப்படுத்தியுள்ளன.

அதன்படி இது பற்றிக் கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க, தாமதமாகவேனும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் இம்முயற்சியை வரவேற்பதாகத் தெரிவித்தார்.

சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தின் விளைவாகவே உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்திருக்கின்றது என்றபோதிலும், இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்ற பயன் கிட்டுவதை உறுதி செய்ய வேண்டியது அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்குத் தீர்வை வழங்குகின்ற உண்மையான நோக்கம் அரசாங்கத்துக்கு இருக்கின்றதா என்பதைத் தம்மால் உறுதியாகக் கூற முடியாதெனக் குறிப்பிட்ட திஸ்ஸ அத்தநாயக்க, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்டவரைபு வெளியானதன் பின்னரே ஏனைய விடயங்கள் தொடர்பில் கூறமுடியும் என்றும் தெரிவித்தார்.

அதேவேளை இந்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் உடனடியாகவே ஸ்தாபிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், போரின் பின்னரான மறுவாழ்வுக்கான தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபித்தல் என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு முக்கிய பரிந்துரைகளை உள்ளடக்கிய அறிக்கையை கடந்த 2009 ஆம் ஆண்டு மேமாதம் 26 ஆம் திகதி தாம் அரசாங்கத்திடம் சமர்ப்பித்ததாகவும் குறிப்பிட்ட மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் இருப்பினும் அரசாங்கம் அதனைச் செய்யவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று கடந்த 2015 ஆம் ஆண்டில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை பிரதமராகக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்றிய நல்லாட்சி அரசாங்கம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடம் வாக்குறுதியளித்த போதிலும், அதனை நடைமுறைப்படுத்தவில்லை என்று தெரிவித்த விஜித்த ஹேரத், யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 14 வருடங்கள் கடந்துள்ள நிலையில் இப்போது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுவதென்பது மிகமிகத் தாமதமான நடவடிக்கையாகும் என்று குறிப்பிட்டார்.

எனினும் தற்போது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவி, அதனூடாக 'கடந்தகால காயங்களை ஆற்றுவதற்குரிய' நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாயின் அதனை வரவேற்கின்றோம். இருப்பினும் இது அரசாங்கத்தின் 'நேர்மையான' நடவடிக்கையா என்பதில் எமக்கு சந்தேகம் உள்ளது' என்றும் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

மேலும், இவ்விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர கூறியதாவது:

இலங்கையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிக்கும் நோக்கில் அமைச்சர்களான விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் அலி சப்ரி ஆகியோர் தென்னாபிரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டு கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தனர். இருப்பினும் தென்னாபிரிக்காவிலும் இலங்கையிலும் இடம் பெற்றவை இருவேறு சம்பவங்களாகும்.

தென்னாபிரிக்காவில் கறுப்பினத்தவர்களுக்கு எதிராக வெள்ளையர்களால் திட்டமிட்ட வகையில் ஒடுக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டன. இருப்பினும் இலங்கையில் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதை முன்னிறுத்திய யுத்தமே இடம் பெற்றது. எனவே தென்னாபிரிக்காவில் இயங்கிய உண்மை மற்றும் நல்லிணக்க அலுவலக மாதிரி இலங்கைக்குப் பொருந்துமா? என்ற சந்தேகம் நிலவுகின்றது.

அதேபோன்று கடந்த காலங்களில் நாம் முன்னெடுத்த எந்தவொரு உள்ளகப் பொறிமுறையையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஊக்குவிக்கவோ, ஆதரவளிக்கவோ இல்லை. அதுமாத்திரமன்றி அவற்றை உரியவாறு நடைமுறைப்படுத்துவதற்கும் இடமளிக்கவில்லை.

அதன் விளைவாகவே இலங்கை தொடர்பில் 30ஸ்ரீ1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அவர்கள் எம்மைத் தண்டிக்க வேண்டும் என்றே கருதுகின்றார்கள். அவர்களின் அனுமதியின்றி நாம் யுத்தத்தை வென்று, அதனை முடிவுக்குக் கொண்டு வந்தமையே அதற்குக் காரணமாகும். எனவே தற்போது உண்மை மற்றும் நல்லிணக்க அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டாலும்கூட, அதனை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஏற்குமா என்ற கேள்வி உள்ளது என்று தெரிவித்தார்.




## வல்வெட்டித்துறைப் புறா தமிழ்நாட்டில் தஞ்சம்!

யாழ்பாணம் வல்வெட்டித்துறையில் நடைபெற்ற புறா பந்தயத்தில் கலந்து கொண்ட புறா வழி மாறி தனுஷ்கோடி சென்றதாக பாதுகாப்பு துறை வட்டார அதிகாரிகள் நடத்திய விசாரணையில் தெரிய வந்துள்ளது.

தமிழகத்தில் இராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் புலித்தேவன் நகரில் உள்ள நகரைச் சேர்ந்த அரச குமார் கடந்த 16 ஆம் திகதி தனுஷ்கோடியிலிருந்து நாட்டுப்படகில் மீன் பிடிக்க கடலுக்கு சென்றார். தனுஷ்கோடியில் இருந்து ஏழு நாட்டிக்கள் தூரத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது காலில் பிளாஸ்டிக் கட்டிய புறா ஒன்று அவரது நாட்டுப்படகில் தஞ்சமடைந்துள்ளது.

புறா காலில் கட்டியிருந்த பிளாஸ்டிக்கில் சில எண்கள் குறிப்பிட்டபட்டிருந்தததுடன் ஆங்கிலத்தில் எழுதி இருந்ததால் அச்சம்மடைந்த அரசகுமார் அந்த புறாவை ராமேஸ்வரம் துறைமுக காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.

இதையடுத்து அந்த புறாவின் காலில் உள்ள பிளாஸ்டிக்கில் இலங்கை தொலைபேசி எண் இருந்ததால் அந்த எண்ணிற்கு மாநில உளவுத்துறை அதிகாரிகள் தொடர்பு கொண்டு விசாரித்தனர்.

அப்போது அந்த புறா இலங்கை யாழ்ப்பாணம் மாவட்டம் வல்வெட்டித்துறையை சேர்ந்த சுதன் என்பவருக்கு சொந்தமானது என முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்தது.

உளவுத்துறை அதிகாரிகள் தொடர்ந்து சுதனிடம் நடத்திய விசாரணையில் தமிழ் புத்தாண்டு ஒட்டி கடந்த 15ஆம் திகதி மாலை யாழ்பாணம் வல்வெட்டித்துறையில் புறா பந்தயம் நடத்தப்பட்டதாகவும், இந்த பந்தயத்தில் சுதனிற்கு சொந்தமான 28 பந்தய புறாக்கள்



பந்தயத்தில் கலந்து கொண்டதாகவும், அதில் 20 புறாக்கள் மட்டும் திரும்பிய நிலையில் எட்டு புறாக்கள் காணாமல் போனதாகவும் சுதன் தெரிவித்துள்ளார்.

அரசகுமார் ஒப்படைத்த புறா சுதன் உடையாதா என உறுதிப்படுத்த உளவுத்துறை அதிகாரிகள் புறாவை போட்டோ எடுத்து வட்ஸ்அப்பில் சுதனுக்கு அனுப்பினர். புகைப்படத்தை பார்த்த சுதன் பந்தயத்தில் காணாமல் போன எட்டு புறாக்களில் இதுவும் ஒன்று என உறுதி செய்தார்.

இதையடுத்து ராமேஸ்வரம் துறைமுகம் காவல் நிலையத்திற்கு உட்பட்ட மருதுபாண்டியர் நகரில் வசித்து வரும் ரகு என்பவர் தனது வீட்டில் புறா வளர்த்து வருவதால் அந்த புறா கூண்டில் இந்த புறாவையும் வைத்து வளர்க்கும் படி பொலிஸார் அவரிடம் ஒப்படைத்தனர்.

இந்த புறா, 'ஹோமர்' இனத்தை சேர்ந்த பந்தய புறா எனவும் தொடர்ந்து 300 கிலோ மீற்றர் தூரம் பறக்க கூடிய ஆற்றல் உடையது என்பதால் யாழ்ப்பாணம் வல்வெட்டிதுறையில் இருந்து தனுஷ்கோடி வரை பறந்து வந்துள்ளதாகவும், இந்த புறா மீண்டும் தனது சொந்த இடத்திற்கு திரும்பி செல்ல அதிக வாய்ப்புள்ளதாகவும் உளவுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்லல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

15 ஏப்ரல் 2023 முதல் 21 ஏப்ரல் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ் வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி பாக்கியம் மயில்வாகனம்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வதிவிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் மயில்வாகனம் அவர்களுடைய 31ம்நாள் நினைவு நாள் 15 ஏப்ரல் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பாக்கியம் மயில் வாகனம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு செல்லத்தம்பி வரதராஜன்

புங்குடுதீவு 10ம் வட்டாரம் கண்ணகை அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பொன்னாந்தோட்டத்தை வதிவிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு செல்லத்தம்பி வரதராஜன் அவர்களுடைய எட்டாவது ஆண்டு நினைவு நாள் 15 ஏப்ரல் 2023 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு செல்லத்தம்பி வரதராஜன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு ஆறுமுகம் கிருஷ்ணபிள்ளை

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ், கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு ஆறுமுகம் கிருஷ்ணபிள்ளை அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 21 ஏப்ரல் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு ஆறுமுகம் கிருஷ்ண பிள்ளை அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 24வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராசம்மா நன்னித்தம்பி

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவர்களின் 24வது ஆண்டு நினைவு நாள் 22 ஏப்ரல் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகம் இரத்தினவடிவேல்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம், தும்பலை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 22 ஏப்ரல் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 83வது பிறந்தநாள் நினைவாக

### செல்வி ருக்மணிதேவி முத்தையா



யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த அமரத்துவச் செல்வி ருக்மணி தேவி முத்தையா அவர்களது 83வது பிறந்த நன் நாள் 30 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அவரது நினைாவக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரத்துவச் செல்வி ருக்மணிதேவி முத்தையாவின் 83வது பிறந்த நாளில் அவரது பெயரால் உணவு வழங்குவதையிட்டு அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் அவரது குடும்பத்தினருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



15 ஏப்ரல் 2023 சனிக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரம் கண்ணகை அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பொன்னாந்தோட்டத்தை வதிவிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு செல்லத்தம்பி வரதராஜன் அவர்களது 8வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



15 ஏப்ரல் 2023 சனிக்கிழமை குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வதிவிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மயில்வாகனம் பாக்கியம் அவர்களது 31ம்நாள் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



16 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு ஸ்ரீரங்கநாதன் கந்தசாமி அவர்களது 3வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



16 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை இறை இரக்கப் பெருவிழா உபயமாக கனடா இறை இரக்கப் பக்திச் சபையினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



18 ஏப்ரல் 2023 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு கமலநாதன் கனகரெத்தினம் அவர்களது 75வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு கமலநாதன் கனகரெத்தினம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



18 ஏப்ரல் 2023 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கேசவன் காயத்திரி தம்பதிகளின் செல்வப்புதல்வி யதிசா கேசவனின் 9வது பிறந்த நன்நாளும் செல்வி திவிசா கேசவனின் 15வது பிறந்த நன்நாளுக்காகவும் (15 ஏப் 2023க்காக) செல்விகள் இருவரும் தமது பெற்றோர்களுடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்

## முதலாம் ஆண்டில் உன் நினைவுகளுடன்

உயிர் சுமந்த தாயே!
எம் வாழ்வின் வலி சுமந்த நீ
ஓராண்டாக எம்முடன் இல்லை
ஆனாலும்
எம் வாழ்வின் வசந்தங்களிலெல்லாம்
வாழ்கிறாய் ....

கடலில் தோன்றும் அலைகள் யாவும்
கரையைச் சேர்வதைப்போல
உங்கள் எண்ண அலைகள் யாவும்
எங்களுடனேயே வாழ்கின்றன...

வாழ்ந்த வாழ்க்கையில்
உயிரோடு ஒட்டிய உறவே,
தஞ்சை கோயில் உள்ளவரை
சோழனுக்கு மரணமில்லை...
ஈழம் என்ற சொல்லிருக்கும்வரை
தலைவனுக்கும் மரணமில்லை...
உங்களால் கட்டமைக்கப்பட்ட
எங்கள் வரலாறு இருக்கும் வரை
உங்களுக்கும் மரணமில்லை...

மரணத்தைவிட தொன்மையான
கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்.



**அமரர் சிவபாக்கியம் மார்க்கண்டு**

20.05.1938 – 03.05.2022

அல்பியன் பதியில் கோயில்கொண்டருளியிருக்கும்

# அருள்மிகு கனடா ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்

## மகோற்சவ விஞ்ஞாபனம் 2023



மாரிதேவி தியானம்
அருணமணி நிபாங்கம் அக்னிகேசம் கரண்டம்
டமருக கர பாசம் கட்க ஹஸ்தம் கபாலம்
அரவ ரமண புக்கம் ஹாரகேயூர யுக்தம்
அகில புவன மாதா மாரிகாதேவி ஸ்வரூபம்

**அம்பிகை அடியார்களே!**

நிகழும் மங்களகரமான சோபகிருது வருஷம் சித்திரைதிங்கள் 7ம் நாள் (20.04.2023) வியழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அச்சுவினி நட்சத்திரமும் பிரதமை திதியும் கூடிய சுபவேளையில் ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் மகோற்சவம் நடைபெறும். அடியவர்கள் உற்சவ காலங்களில் ஆலயம் வந்து அம்பிகையை தரிசித்தல் உத்தமோத்தம புண்ணியமாகும்.

| | |
|---|---|
| 19-04-2023 புதன் | வருடாந்த மகோற்சவ கிரியைகள் ஆரம்பம். விக்னேஸ்வர, மூலமூர்த்தி, உற்சவமூர்த்தி, அஸ்திரதேவி, சிம்ம, அனுக்ஞைகள், கிராம சாந்தி, வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரகணம் |
| 20-04-2023 வியாழன் | காலை விசேட புண்ணியாக வாசனம், ரக்ஷாபந்தனம், பேரிதாடனம், வசந்தமண்டபப்பூசை, அஸ்திரதேவியோடு துவஜபட வீதி பிரதக்ஷணம், மூல சிம்ம பூசை, தம்ப பிரதிஷ்டை, துவஜபட அபிசேகம், சண்டா தேவி ஆவாகனம், யாத்ரா தானம், துவஜாரோகணம் (கொடியேற்றம்), கணபதி தானம், சிம்ம தானம், அஸ்திரதேவி ஆவாகனம், பலிபீட பிரதிஷ்டை, மகாசிர்வாதம், வீதி பிரதக்ஷணம், நவசந்தியாவாகனம், இரவு: யாகாரம்பம் |
| 04-05-2023 வியாழன் | காலை: யாகாங்குர விசர்ஜனம், ஆர்ணோற்சவம், விசேட தீர்த்த தொட்டியில் அஸ்திரதேவி ரக்ஷாபந்தன விசர்ஜனம், தீர்த்த ஸ்நானம் முடிந்து மகாபூர்ணாகுதி, யாக கும்பாபிஷேகம், இரவு: துவஜாவரோகணம் (கொடியிறக்கம்), நவசந்தி விசர்ஜனம், மௌனோற்சவம், மௌனோற்சவம், ரக்ஷாபந்தன விசர்ஜனம், சண்டேஸ்வரர் உற்சவம், ஆசாரிய உற்சவம், குரு வழிபாடு |

| நாள் | உற்சவம் | பகல் உபயகாரர் | இரவு உபயகாரர் |
|---|---|---|---|
| 20-04-2023 (வியாழன்) | 1ம் திருவிழா | கொடியேற்றம் காலை 10:00 மணி. ராஜ்குமார் குடும்பம், உதயகுமார் குடும்பம், ஸ்ரீந்திரன் குடும்பம், பாலகிருஷ்ணன் குடும்பம் | சிவயம் குடும்பம், சுகுணாகுமார் குடும்பம் மாணிக்கம் சௌந்திரமோகன் குடும்பம் |
| 21-04-2023 (வெள்ளி) | 2ம் திருவிழா | பிரேம்குமார் இளங்கோ குடும்பம் | தம்பாள்துரை குடும்பம் |
| 22-04-2023 (சனி) | 3ம் திருவிழா | சந்திரலிங்கம், தமிழ்செல்வி குடும்பம் | விஜயகுமாரன் சுகன்யா குடும்பம் |
| 23-04-2023 (ஞாயிறு) | 4ம் திருவிழா | ஆனந்தகுமார் ஆனந்தவேள் குடும்பம், பிரணவன் பாலகுமார் குடும்பம், கண்ணன் வெங்கடாசலம் குடும்பம் | அருள் சந்திரன் குடும்பம் |
| 24-04-2023 (திங்கள்) | 5ம் திருவிழா | சுவர்ணராஜ் சின்னமாயில் குடும்பம் | குணசேகரம் குடும்பம், தனசேகரம் குடும்பம், ஜெயசேகரம் குடும்பம். |
| 25-04-2023 (செவ்வாய்) | 6ம் திருவிழா | மோகனதாஸ் சுதன் சாந்தி குடும்பம் | நாராயணசாமி மனமகள் குடும்பம் (மாணிக்கம்பதி) |
| 26-04-2023 (புதன்) | 7ம் திருவிழா | கிராஷ்டாமர் ராஜசேகரம், கிலாவதி, தயவந்தன், சிந்துஜா குடும்பம், தம்பிராசுப்பிள்ளை, பத்ரன் குடும்பம் | சிவநேசன் தங்கேஸ்வரி குடும்பம் |
| 27-04-2023 (வியாழன்) | 8ம் திருவிழா | சகாதேவன்(அன்னாச்சி), சந்திரமோகன் குடும்பம் | (வேட்டைத்திருவிழா) மோகனதாஸ் தங்கராணி குடும்பம், செல் சுஜாதா குடும்பம், சது கிரேத் குடும்பம் |
| 28-04-2023 (வெள்ளி) | 9ம் திருவிழா | தேவசிகாமணி தங்கமணி குடும்பம் ( தேவக்கிளி குடும்பம் ) | நிரோசன் குடும்பம், சீலன் குடும்பம், நந்தன் குடும்பம், துளா குடும்பம், ஜெயம் குடும்பம் |
| 29-04-2023 (சனி) | 10ம் திருவிழா | முரளி கௌரி குடும்பம், ஜவந்திரன் பவானி குடும்பம் | பாலகுமாரன் மாலச்சந்திரன் குடும்பம் |
| 30-04-2023 (ஞாயிறு) | 11ம் திருவிழா | (பூங்காவனம்) இளைஞர்கள் | (பூங்காவனம் இரவு)இளைஞர்கள் |
| 01-05-2023 (திங்கள்) | 12ம் திருவிழா | இரா தனபாலன் குடும்பம் | புஷ்பிவேட்டை சுரேஷ் குடும்பம், நிஷாந்தன் குடும்பம் |
| 02-05-2023 (செவ்வாய்) | 13ம் திருவிழா | கண்ணன் சங்கீதா குடும்பம் | சப்பறம் சி. இளையகுமார் குடும்பம் |
| 03-05-2023 (புதன்) | 14ம் திருவிழா | தேர் க.இ.த. சந்திரலிங்கம் சிவாஜி குடும்பம் | சுந்தராசி அண்ணாமலை குடும்பம் |
| 04-05-2023 (வியாழன்) | 15ம் திருவிழா | தீர்த்தம் வாசுகி சிவரூபன் குடும்பம் | கொடியிறக்கம் சுகந்தன் சுகிதா குடும்பம் |
| 08-05-2023 (திங்கள்) | குளிர்த்தி | குளிர்த்தி அபிசேகம் மோகன். சிவகுமார் சந்தானலக்ஷ்மி குடும்பம் | கற்பூரத் திருவிழா அசோக்குமார் கௌசிகி குடும்பம் |
| 12-05-2023 (வெள்ளி) | இரவு | வைரவர் மடை – பிரணவி பவித்ரா குடும்பம் | |

| | | |
|---|---|---|
| அபிசேகம் | பகல் 9:00 மணி | இரவு 6:00 மணி |
| மூலஸ்தான பூசை | பகல் 9:30 மணி | இரவு 6:30 மணி |
| வசந்த மண்டப பூசை | பகல் 11:00 மணி | இரவு 8:00 மணி |

ஆலய பிரதம குரு: ஆகம கிரியா வித்துவ சிவஸ்ரீ ஆறுமுகக்குருக்கள்

மங்கள வாத்தியம்: சிவா நாதஸ்வர மியூசிக் அக்கடமி, சிவயம் குழுவினர்

1771 ALbion Road. Unit #1, Toronto, Ontario, M9W 5S7, Canada. 416.213.0110

**04-05-2023 வியழக்கிழமை சித்ரா பௌர்ணமி அன்று காலை 6 மணி முதல் பிதிர் தர்ப்பணம் செய்யப்படும்**

www.shrimuththumaari.com Canada-Shri-Muththumaari-Amman

இங்ஙனம்: ஆலய தர்மகர்த்தா சபையினர்

# மேலும் ஒரு கோவிலுக்கு ஆபத்து

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



கடந்த திங்கட்கிழமை பங்குனித் திங்களன்று நெடுங்கேணியில் உள்ள நொச்சிக்குளம் அம்மன் கோவிலை வழிபடச் சென்ற பக்தர்களைத் தொல்லியல் திணைக்களம் தடுத்து நிறுத்தியதாக செய்திகள் வெளியாகின. பக்தர்களைப் பொறுத்தவரை அது கோவில். தொல்லியல் திணைக்களமோ அதை ஒரு தொல்லியல் அமைவிடமாக கருதுகிறது. நாட்டின் தொல்லியல் சட்டங்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விடவும் இறுக்கமானவை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறுகிறார்.

ஒரு மக்கள் கூட்டத்தால் தொடர்ச்சியாக வழிபடப்படும் ஓரிடத்தை தொல்லியல் திணைக்களம் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது என்றால் முதலில் அந்த வழிபாட்டிடத்தை நிர்வகிக்கும் தனிநபர் அல்லது நிர்வாக கட்டமைப்பிடம் அனுமதி பெறப்பட வேண்டும் என்று துறைசார் வல்லுனர்கள் கூறுகிறார்கள். அழிவடையும் நிலையில் உள்ள ஒரு மரபுரிமை சின்னத்தை தொல்லியல் திணைக்களம் பொறுப்பேற்பது வேறு,மக்களால் தொடர்ந்து வழிபடப்படும் ஓரிடத்தை பொறுப்பெடுப்பது வேறு என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

பொலநறுவையில் காணப்படும் பாழடைந்த பல சிவாலயங்களில் இரண்டாவது சிவனாலயம் என்று அழைக்கப்படுவது இப்பொழுது பக்தர்களால் வழிபடப்படுகிறது. அதற்கு பொறுப்பாக ஒரு சிங்கள பூசாரி இருக்கிறார். தமிழ் சிங்கள பக்தர்கள் அங்கே போவதுண்டு. அது தொல்லியல் விதிகளுக்கு முரணானது என்றாலும் அங்கே ஒரு நெகிழ்ச்சிப் போக்கு கடைப்பிடிக்கப்படுகிறது என்பதையும் துறைசார் புலமையாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். ஒரு மக்கள் கூட்டத்தின் வழிபாட்டு உரிமையும் தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரமும் முட்டும் இடங்கள் இவை.

இலங்கைத் தீவைப் பொறுத்தவரை தொல்லியல் திணைக்களத்தை தமிழ் மக்கள் ஒரு நட்பான திணைக்களமாகப் பார்க்கவில்லை. தமிழ் மரபுரிமைச் சொத்துக்களை தொல்லியல் திணைக்களம் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது என்பது சிங்கள பௌத்த மயமாக்கலின் ஒரு பகுதி என்று தமிழ் மக்கள் சந்தேகிக்கின்றார்கள். குருந்தூர் மலையிலும் வெடுக்கு நாறி மலையிலும் விவகாரம் அப்படித் தான் காணப்படுகிறது. கன்னியா வெந்நீர் ஊற்றிலும் நெடுந்தீவில் வெடியரசன் கோட்டையிலும் நிலைமை அப்படித் தான்.

தொல்லியல் திணைக்களத்தால் பராமரிக்கப்படும் சிதைந்த அல்லது சிதைந்து செல்லும் ஒரு மரபுரிமைச் சொத்தை பக்தர்கள் அணுகும் பொழுது அங்கே துறைசார் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ற வரையறைகள் இருப்பது நியாயமானது. ஆனால் இலங்கைத்தீவில் நிலைமை அவ்வாறல்ல. தமிழ் மக்கள், தொல்லியல் திணைக்களத்தை சிங்கள பௌத்த மயமாக்கலின் கருவியாகவே பார்க்கிறார்கள்.

கலாநிதி. யூட்.பெர்னாண்டோ பேராசிரியர். நிரா விக்கிரமசிங்க போன்ற சிங்கள புலமையாளர்களே இலங்கைத்தீவின் தொல்லியல் துறையைக் கடுமையாக விமர்சித்துள்ளார்கள். கலாநிதி. யூட்.பெர்னாண்டோ மரபுரிமையும் தேசிய வாதமும் சிறீலங்காவின் விஷம் என்ற தலைப்பில் 2015 மார்ச் மாதம் கொழும்பு ரெலிகிராப்பில் மிக விரிவான ஒரு கட்டுரையை எழுதியுள்ளார தொல்லியல் திணைக்களம் மட்டுமல்ல மத்திய அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வரும் எல்லாத் திணைக்களங்களுமே சிங்கள பௌத்த அரசுக் கொள்கையின் உபகரணங்கள் தான் முப்படைகளும் உட்பட நீதிபரிபாலனக் கட்டமைப்பு போலீஸ் திணைக்களம் உட்பட அரசுத் திணைக்களங்கள் அனைத்தும் அரசின் உபகரணங்கள் தான். அரசின் கொள்கை எதுவோ அதை அவை அமுல்படுத்தும். அவற்றுக்கெல்லாம் சுயாதீனம் இருப்பதாக கற்பிக்கப்படுவது ஒரு மாயை. எனவே அரசுக் கொள்கை எதுவோ அதைத் தான் அரச உபகரணங்கள் முன்னெடுக்கும். இப்பொழுது விடயம் தெளிவாக தெரிகிறது அல்லவா? அரசின் கொள்கை சிங்கள பௌத்த மயமாக்கல் என்றால் திணைக்களங்கள் அதைத் தான் அமுல்படுத்தும்.



நாடு ஐ.எம்.எஃப்பின் நிபந்தனைகளுக்கு உட்பட்டதன் விளைவாக சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கக் கூடிய அதிருப்தி, கோபம் என்பவற்றைத் திசை திருப்புவதற்கு தமிழ்மக்கள் மீதான தொல்லியல் ஆக்கிரமிப்பை தூண்டி விட்டால் போதும். சிங்களப் பொதுஜனத்தின் கோபத்தை இலகுவாகத் திசை திருப்பலாம். அரசாங்கத்தின் இந்தக் கொள்கையின் விளைவாகத் தான் அண்மைக் காலமாக தமிழ் மக்களின் வழிபாட்டுரிமை, மரபுரிமை போன்றன தீவிரமாக கேள்விக்கு உள்ளாக்கப்படுகின்றன. அதற்கு எதிராகத் தமிழ் மக்கள் ஆங்காங்கே எதிர்ப்பைக் காட்டி வருகிறார்கள்.

உலகில் பெரும்பாலான நாடுகளில் தொல்லியல் துறை எனப்படுவது தனது நாட்டின் பெருமைமிகு மரபுரிமைச் சொத்துக்கள் என்று கருதப்படும் இடங்களை பாதுகாக்கின்றது. அதனை அவர்கள் இன ரீதியாகவோ மதரீதியாகவோ பார்ப்பதில்லை. பதிலாக அதைத் தமது நாட்டின் மரபுரிமைச் சொத்து என்றுதான் பார்க்கிறார்கள்.அந்த அடிப்படையில் அதைப் பாதுகாக்கின்றார்கள் என்பதனை வரலாற்று அறிஞர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

உதாரணமாக இந்திய நாகரீகத்தின் தொட்டில்களில் ஒன்றாகக் கருதப்படும் மொகஞ்சதாரோ ஹரப்பா பாகிஸ்தானின் எல்லைக்குள் தான் உண்டு. ஆனால் இஸ்லாமிய நாடாகிய பாகிஸ்தான் அந்த அகழ்வாராய்ச்சிப் பிரதேசத்தை தனது மரபுரிமை சொத்தாகப் பேணிப் பாதுகாக்கின்றது.

உலகின் மிகப்பெரிய முஸ்லிம் சனத்தொகை இந்தோனேசியாவில் உண்டு. அங்கே காணப்படும் மிகப் பெரிய புத்தர் சிலைகளை அங்குள்ள இஸ்லாமிய அரசு பாதுகாக்கின்றது.

ஆனால் இலங்கைத்தீவிலோ தொல்லியல் துறை எனப்படுவது ஆப்கானின் தாலிபான்களைப் போல செயல்படுகின்றதா என்ற கேள்வி தமிழர்கள் மத்தியில் உண்டு.ஆப்கானில் உள்ள பிரம்மாண்டமான புத்தர் சிலைகளை தாலிபான்கள் சேதப்படுத்தியதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

இலங்கைத் தீவின் அரசாட்சி பாரம்பரியத்தைப் பொறுத்தவரை இது ஒரு வழமை தான். 2009க்குமுன் அரச படைகள் சிங்களமயமாக்கலை போர் என்ற வடிவத்தில் முன்னெடுத்தன. 2009க்குப்பின் திணைக்களங்கள் அதனை வேறு வடிவத்தில் முன்னெடுக்கின்றன.அவ்வளவுதான் வித்தியாசம். சிங்கள பௌத்த மயமாக்கல் 2009க்கு முன்பு முழு வேகத்தில் இடம் பெற முடியவில்லை. ஏனென்றால் போர் இருந்தது. ஆனால் இப்பொழுது முழு நாடுமே வெற்றி கொள்ளப்பட்ட நிலம். எனவே எங்கெல்லாம் சிங்கள பௌத்த மயமாக்கலைச் செய்யலாமோ அங்கெல்லாம் செய்யலாம். திணைக்களங்கள் மட்டுமல்ல, மாகாண ஆளுநர்களை வைத்தும் செய்யலாம். மாகாண நிர்வாகம் இயங்காத ஓர் அரசியற் சூழலில், உள்ளூராட்சி சபைகள் இயங்காத ஓர் அரசியற் சூழலில், சிங்களபௌத்த மயமாக்கலை இலகுவாக முன்னெடுக்கலாம். அதுதான் இப்பொழுது நடக்கிறது.

இந்த சிங்கள பௌத்த மயமாக்கலைத் தடுப்பதற்கு தமிழ்மக்கள் மத்தியில் வலிமையான எதிர்ப்பு இல்லை. தமிழ்மக்கள் காட்டி வரும் எதிர்ப்புக்கள் அதைத் தடுக்க போதுமானவை அல்ல. அவ்வாறு எதிர்க்க முடியாத ஒரு சூழலில் அல்லது எதிர்ப்பைக் காட்டவல்ல வலிமையான கட்சிகளின் கூட்டோ மக்கள் இயக்கமோ இல்லாத ஒரு வெற்றிடத்தில் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் இந்தியாவைத் தஞ்சம் அடைகின்றார்கள். இந்துக்களின் மரபுரிமைச் சின்னங்கள் அழிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி பாரதிய ஜனதா அரசாங்கத்தின் பாதுகாப்பைப் பெற முயற்சிக்கின்றார்கள்.

இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதாக் கட்சி இந்த விடயத்தில் இதுவரையிலும் உத்தியோக பூர்வமாக கருத்து தெரிவித்ததாக தெரியவில்லை. இந்திய அரசாங்கத்தின் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இரு நாடுகளுக்குமிடையிலான உறவு பொறுத்து தண்ணீரை விட இரத்தம் அடர்த்தியானது என்று கூறுகிறார்.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவரான மிலிந்த மொறகொட சிங்கள பௌத்த பாரம்பரியத்திற்கும் இந்தியாவுக்கும் இடையிலே எப்படிப் பிணைப்புகளை ஏற்படுத்தலாம் என்று சிந்தித்து உழைக்கிறார். அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்புசார் உறவுகள் என்று பார்த்தால் இந்த விடயத்தில் சிங்களபௌத்த அரசுக் கட்டமைப்புக்கும் இந்திய அரசுக் கட்டமைப்புக்கும் இடையே ஒப்பீட்டளவில் நெருக்கமும் இடையூடாட்டமும் அதிகம்.

அவ்வாறான கட்டமைப்புசார் உறவுகள் தமிழ் மக்களுக்கு இல்லை. இந்த வெற்றிடத்தில் தான் தமிழ்மக்கள் நாட்டுக்குள்ளேயும் நாட்டுக்கு வெளியேயும் உதிரிகளாக பாரதிய ஜனதா அரசாங்கத்தை அணுகி வருகிறார்கள். ஆனால் இந்த அணுகுமுறையின் விளைவாக இதுவரையிலும் இந்தியா தமிழ் மக்களுக்கு பரிந்துரைக்கும் தீர்வு 13வது திருத்தத்தை கடக்கவில்லை.

13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துமாறு இலங்கை மீது நிர்ணயகரமான விதங்களில் அழுத்தத்தை பிரயோகிக்கவும் இந்தியாவால் முடியவில்லை. கடந்த சில தசாப்தங்களாக இலங்கை பொறுத்து இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை தோல்வியடைந்து விட்டது என்பதே நடைமுறை உண்மையாகும்.

அம்பாந்தோட்டையில் சீனா 99 ஆண்டு கால குத்தகைக்கு குந்தியிருக்கின்றது. கொழும்புத் துறைமுகத்தில் சீனப் பட்டினம் சீனாவின் செல்வாக்குக்குள் தான் இருக்கும். இது இந்தியாவின் செல்வாக்கு மண்டலம். இந்த மண்டலத்துக்குள் ஒரு வெளிப் பேரரசு இப்படி நிரந்தரமாக வந்து குந்தியது என்பது இந்திய வெளியுறவு அணுகுமுறைகளின் தோல்வி தான். இப்படிப் பட்டதோர் வெளியுறவுச் சூழலில் இந்துத் தமிழர்களை இந்தியா காக்க வேண்டும் என்று கேட்கும் குரல் அண்மை காலங்களில் வலிமையடைந்து வருகிறது.

தமிழ் மக்கள் மிக நீண்ட கடல் எல்லையைக் கொண்டவர்கள். தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்ற சக்திகள் அக்கடல் எல்லையின் மீது ஆதிக்கம் செலுத்த முடியும்.தனது செல்வாக்கு மண்டலத்தில் நிரந்தரமாகத் தரித்து நிற்க எத்தனிக்கும் சீனாவை அகற்றுவதற்கு இந்தியாவுக்கு தமிழ் மக்கள் தேவை. அதே போல சிங்கள பௌத்த மயமாக்கலை தடுப்பதற்கு தமிழ் மக்களுக்கு இந்தியா தேவை. ராஜதந்திரம் இனப் படுவது தேவைகளின் கலை தான். நீதி நியாயத்தின் கலை அல்ல.

ஒரு வரலாற்று அறிஞர் சுட்டிக் காட்டியது போல, பாபர் மசூதியை உடைத்த ஒரு கட்சியிடம் உடைக்கப் படும் சிவனாலயங்களுக்காக நீதி கேட்பதில் அறநெறி சார்ந்த முரண் உண்டு. ஆனால் ராஜதந்திரத்தில் அறமெல்லாம் கிடையாது. நீதி நியாயங்கள் கிடையாது. நலன்சார் உறவுகளுக்கு இடையிலான பேரம் தான் உண்டு. நீதிமான்களிடந் தான் தமிழ்மக்கள் நீதியைக் கேட்கலாம் என்றால் இந்தக் கேடு கெட்ட பூமியில் தமிழ்மக்கள் யாரிடமும் நீதியைக் கேட்க முடியாது. எனவே இந்தியாவோடு தமிழ்மக்கள் பரஸ்பரம் நலன் சார்ந்த ஒரு புரிந்துணர்வுக்கு போக வேண்டும்.

இந்தியாவின் பாதுகாப்பு வியூகத்தில் தமிழ் மக்கள் எப்படிப் பங்காளிகள் ஆவது என்று சிந்திக்க வேண்டும். அதற்கு தமிழ் கட்சிகளிடம் பொருத்தமான வெளியுறவுத் தரிசனங்கள் இருக்கவேண்டும். வெளியுறவுக் கட்டமைப்புகள் இருக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் நடந்த உணவு தவிர்ப்புப் போராட்டம் அவசியம். அதேயளவுக்கு அவசியம் பொருத்தமான வெளியுறவுக் கூட்டுக்கள்.

# Bolton Honda

65 Pillsworth Road, Bolton, ON, L7E 4E9

**Lease from 4.08% on select 2023 models**

## LEASE TO OWN $93



weekly - Plus TAX

$0 down @ 6.58%

LEASE FOR 60 MONTHS - 20,000 km/yr

CANADIAN BUILT

**2023 CIVIC LX Model**

## LEASE TO OWN $120



weekly - Plus TAX

LEASE FOR 60 MONTHS - 20,000 km/yr - 7.59%

**2023 CR-V**

## USED VEHICLES

Over 100 USED Vehicles

HONDA | TOYOTA
LEXUS | ACURA
BMW | AUDI

**CIVIC**
20 in stock

**CR-V**
15 in stock

**ACCORD**
10 in stock

**ODYSSEY**
10 in stock

**2023 CR-V HYBRID Available**

**NO CREDIT BAD CREDIT NO PROBLEM!**

HONDA certified used vehicles come with 7 Years or 160,000 km Warranty

புதிய பாவித்த வாகனங்களை தமிழில் உரையாடி மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்



tonymidtown@hotmail.com

**Tony Siva** 647.269.0749

Sales & Leasing Executive

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கு எதிர்ப்பு!

முதலில் அவர்கள் சோசலிஸ்டுகளைத் தேடி வந்தார்கள். நான் எதுவும் பேசவில்லை. ஏனென்றால் நான் ஒரு சோசலிஸ்ட் இல்லை.

அடுத்து அவர்கள் தொழிற்சங்கவாதிகளை தேடி வந்தார்கள். அப்போதும்



நான் பேசவில்லை. ஏனென்றால் நான் ஒரு தொழிற்சங்கவாதி இல்லை.

பிறகு அவர்கள் யூதர்களைத் தேடி வந்தார்கள். அப்போதும் நான் பேசவில்லை. ஏனென்றால் நான் ஒரு யூதன் இல்லை.

பிறகு அவர்கள் என்னைத் தேடி வந்தார்கள். எனக்காக பேச எவரும் இருக்கவில்லை.

கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் நாஜி சிந்தனைகளையும் தீவிர வலதுசாரி இயக்கங்களையும் ஆதரித்தவரும் பிறகு ஹிட்லரின் ஆட்சி புரட்டஸ்தாந்து திருச்சபையில் செய்த தலையீடுகளை வெளிப்படையாக கடுமையாக எதிர்த்தமைக்காக சிறையிலும் சித்திரவதை முகாமிலும் அடைக்கப்பட்டவருமான ஜேர்மனிய போதகர் மார்ட்டின் நிமொல்லர் இரண்டாவது உலகப் போருக்கு பிறகு கூறிய வார்த்தைகள் இவை.

பயங்கரவாத தடைச்சட்டம் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராக குறிப்பாக நான்கு தசாப்தங்களுக்கு அதிகமான காலமாக தமிழர்களுக்கு எதிராக கொடூரமான முறையில் பிரயோகிக்கப்பட்டபோது விரல் விட்டு எண்ணக்கூடிய சில மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் காட்டிய எதிர்ப்பைத் தவிர, தென்னிலங்கையில் பொதுவில் காணப்பட்ட மௌனத்தையும் பிறகு கடந்த வருடம் 'அறகலய' மக்கள் போராட்ட இயக்க தலைவர்களுக்கு எதிராக அதே சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்தியபோது எழுந்த எதிர்ப்பு ஆரவாரக் குரல்களையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது அந்த வார்த்தைகளே நினைவுக்கு வந்தன.

ஆனால் அண்மைய அனுபவங்களுக்கு பிறகு பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டங்களை அரசாங்கம் துஷ்பிரயோகம் செய்வதற்கு எதிராக தென்னிலங்கையில் கிளம்பியிருக்கும் மிகுந்த முனைப்புடன் கூடிய எதிர்ப்பு பெரிதும் வரவேற்கத்தக்க ஆரோக்கியமான மாற்றத்தை பிரதிபலிப்பதாக இருக்கிறது.

உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் கடுமையான கண்டனத்துக்கு உள்ளாகி வந்திருக்கும் பயங்கரவாத தடைச்சட்டம் (Prevention of Terrorism Act.) 44 வருங்களாக நடைமுறையில் இருந்து வருகிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் தீவிரமடையத் தொடங்கிய தமிழ் ஆயுதப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு ஜே.ஆர்.ஜெயவர்தன அரசாங்கத்தினால் தற்காலிகமானதாக 1979ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டு பிறகு 1982 ஆம் ஆண்டு நிரந்தரமானதாக்கப்பட்ட அந்த கொடிய சட்டத்துக்கு பதிலாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்வைத்திருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்துக்கு இப்போது மனித உரிமைகள் அமைப்புக்கள். சிவில் சமூகம், சட்டத்துறை சமூகம், தொழிற்சங்கங்கள் மற்றும் மாணவர் அமைப்புக்களிடம் இருந்து கிளம்பியிருப்பதைப் போன்ற எதிர்ப்புக்கு வேறு எந்தவொரு சட்டமூலமும் அண்மைய தசாப்தங்களில் முகங்கொடுத்திருக்கும் என்று கூறமுடியாது.

எதிர்க்கட்சிகள், சட்டத்தரணிகள் மற்றும் சமூக, அரசியல் செயற்பாட்டாளர்களின் வேண்டுகோள்களை தொடர்ந்து சர்ச்சைக்குரிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை தாமதிப்பதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச கடந்தவாரம் அறிவித்தார். புதிய சட்டமூலம் மார்ச் 23 அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இதற்கு உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் கடுமையான எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் போதுமான கலந்தாலோசனை இல்லாமல் சட்டமூலம் வெளியிடப்பட்டிருப்பது குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியது.

பாராளுமன்றத்தில் சட்ட மூலத்தின் முதலாவது வாசிப்பு ஏப்ரல் நான்காம் திகதிக்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், சட்டமூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தை நாட விரும்புபவர்கள் ஏப்ரல் 6 ஆம் திகதி தொடங்கிய மூன்று வாரகால நீதிமன்ற விடுமுறை காரணமாக பிரச்சினைகளை எதிர்நோக்குவதை தவிர்க்கும் நோக்குடன் பாராளுமன்றத்தில் அதை சமர்ப்பிப்பதை அரசாங்கம் தாமதிப்பதாக விஜேதாச கூறினார். ஏப்ரல் கடைசி வாரத்தில் அல்லது மே முதல் வாரத்தில் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்கு முன்னதாக பொது விவாதத்துக்கும் கலந்துரையாடலுக்கும் வசதியாக அதன் வரைவு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்று கடந்த மாதமே சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதிக்கும் நீதியமைச்சருக்கும் வெளியுறவு அமைச்சருக்கும் கடிதங்களை எழுதியது. ஆனால், அதிகாரத்தில் உள்ளவர்கள் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக் கூடியதாக சட்ட வரைவை பொது விவாதத்துக்கு உட்படுத்த விரும்பவில்லை. அதற்கான காரணத்தை சட்டமூலத்தின் ஏற்பாடுகளை வாசிக்கும் போது தெளிவாக புரிந்து கொள்ளமுடியும்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் பல அம்சங்கள் அபாயகரமானவை. பயங்கரவாத தடைச்சட்டமாக இருந்தாலென்ன வேறு கிறிமினல் சட்டங்களாக இருந்தாலென்ன அவை பரந்தளவில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வந்த இலங்கையின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது சட்டமூலத்தின் பல ஏற்பாடுகள் குறித்து கடுமையான ஐயம் எழுகிறது. அதில் உள்ள பயங்கரவாதத்துக்கான வரைவிலக்கணம் மிகவும் விசாலமானதாக இருக்கிறது என்று கடந்த இரு வருடங்களாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக இருந்த சாலியபீரிஸ் கடந்த வாரம் நேர்காணல் ஒன்றில் கூறியிருந்தார். கடந்த வருடத்தைய மக்கள் கிளர்ச்சியின் போது போராட்டக்காரர்களின் உரிமைகளுக்காக துணிச்சலுடன் குரல் கொடுத்த அவர் புதிய சட்டமூலம் நிறைவேற்றப்படுவதற்கு எதிராக பரந்தளவிலான இயக்கம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் சட்டமூலத்தின் ஆபத்துக்கள் குறித்து மக்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

சட்டமூலம் ஜனநாயக ரீதியான எதிர்ப்பையும் தொழிற்சங்கப் போராட்டங்களையும் நசுக்கி (பொருளாதார மீட்சியை சாதிப்பதற்கு அவசியமானது என்று அதிகாரத்தில் இருப்பவர்கள் தவறுதலாக நம்பும்) எதேச்சாதிகார ஆட்சியை நிறுவும் நோக்கத்துடன் வரையப்பட்டிருக்கிறது. பாராளுமன்றத்தில் சட்ட மூலத்தை சமர்ப்பிப்பதை அரசாங்கம் தாமதித்திருக்கின்ற போதிலும் பரந்தளவிலான ஒரு கலந்துரையாடலுக்கு அதை அனுமதிப்பதில் அரசாங்கம் எந்தளவுக்கு அக்கறை கொண்டிருக்கிறது என்பது சந்தேகத்துக்குரியதே. கடுமையான விமர்சனங்கள் கிளம்பியிருப்பதற்கு மத்தியிலும் கூட சட்டமூலத்தில் பெரிய மாற்றங்கள் செய்யப்படமாட்டாது என்று அமைச்சர் விஜேதாச கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

பயங்கரவாதத்துக்கு வரைவிலக்கணம் வகுப்பது என்பது ஒரு சர்வதேசப் பிரச்சினை. பயங்கரவாதம் என்றால் என்ன என்பது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையினால் கூட உலகளாவிய கருத்தொருமிப்பை இதுவரையில் எட்ட முடியவில்லை.

இத்தகைய பின்னணியில் சட்டமூலம் குறித்து நியூயோர்க்கை தலைமையகமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு (Human Rights Watch) இரு தினங்களுக்கு முன்னர் வெளியிட்ட நீண்டதொரு அறிக்கையின் முக்கிய அம்சங்கள் கவனத்தை பெரிதும் தூண்டுபவையாக அமைந்திருக்கின்றன.

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- வீதனபாலசிங்கம் -



உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அடிப்படை மனித உரிமைகளை திட்டமிட்டமுறையில் மீறுவதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரமளிக்கும். சட்ட மூலத்தை அரசாங்கம் திரும்பப் பெற்று, பயங்கரவாதத்துக்கு எதிரான எந்தவொரு சட்டமும் சர்வதேச மனித உரிமைகள் தராதரங்களை மதித்துப் போற்றுவதாக அமைவதை கலந்தாலோசனைகள் ஊடாக உறுதி செய்ய வேண்டும். தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இடம்பெற்று வந்த துஷ்பிரயோகங்கள் தொடர்பில் உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் கிளம்பிய கண்டனங்களையடுத்து மேம்பட்ட சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதாக இலங்கை அரசாங்கம் உறுதியளித்தது. (22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# சிலைகளின் ஆக்கிரமிப்பு தீர்வைத் திசை திருப்புவா?

யாழ்.நகரில் இருந்து ஈழநாட்டிற்காக
- பார்த்தீபன் -

திடீரென வைக்கப்படும் சிலைகள்தான் யாழ்ப்பாணத்தை இப்போது பேசு பொருளாகியிருக்கின்றது. குறிப்பிட்ட ஒரு நிலப்பரப்பை யாருடைய ஆளுகைக்குட்பட்டது என்பதை உறுதிப்படுத்துவதற்கான தொல்லியல் ஆதாரங்களில் ஒன்றாக சிலைகள் அல்லது சிதைவுகள் கருதப்படுகின்றது. இந்தப் பின்னணியில் தான் சிலைகள் தகர்க்கப்படுவதும் புதிய சிலைகள் இரவோடிரவாக வருவதும் இடம் பெறுகின்றது. மக்கள் அனைவரும் எல்லாவற்றையும் மறந்து போய் இப்போது சிலைகளுக்குப் பின்னால் ஓடிக்கொண்டிருக்கின்றார்கள்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள வெடுக்குநாறி மலையில் பிரதிஸ்ட்டை செய்யப்பட்டிருந்த ஆதிலிங்கேஸ்வரர் விக்கிரம் சில வாரங்களுக்கு முன்னர் இனந்தெரியாத குழு ஒன்றினால் தகர்க்கப்பட்டது. இந்தப் பகுதிக்கு உரிமை கொண்டாடக்கூடியவர்கள் யார் என்பது நீதிமன்ற விசாரணையில் இருக்கும் நிலையிலேயே இந்த விக்கிரம் தகர்க்கப்பட்டிருக்கின்றது. தொல்லியல் பகுதியாக அடையாளம் காணப்பட்ட இந்தப்பகுதியில் புதிய கட்டுமானங்களை அமைப்பதோ அல்லது நீக்குவதோ தடை செய்யப்பட்டிருந்த நிலையில் தான் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

முல்லைத்தீவில் குருந்தூர்மலைப் பகுதியில் இடம் பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து வெடுக்குநாறிமலை இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றது. இவை தொடர்பில் பொலிசார் மட்டுமன்றி நீதிமன்றமும் மௌனமாகத் தான் இருக்கின்றது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, மற்றொரு வடிவத்தில் அரசாங்கம் முன்னெடுக்கின்றது. முன்னர் படையினர் போரை நேரடியாக முன்னெடுத்தார்.கள். இப்போது அரசாங்கத்தின் இயந்திரங்களான திணைகளங்கள் இந்தப் போரை முன்னெடுக்கின்றன. இதில் தொல்லியல் திணைக்களம் முக்கிய மானது. வன ஜீவராசிகள் திணைக்களம் போன்றனவும் குறிப்பிட்ட பகுதிகளை



அடையாளம் கண்டு அங்கிருந்து தமிழரை வெளியேற்றுவதற்கான முயற்சிகளை முன்னெடுக்கின்றன.

தொல்லியல் திணைக்களம் முற்றுமுழுதாக சிங்கள புத்திஜீவிகளையே உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. இதற்கு இரண்டு தமிழ்ப் பேராசிரியர்கள் உள்வாங்கப்பட்டதாக செய்திகள் வெளிவந்திருந்த போதிலும், அவ்வாறு எதுவும் இடம் பெறவில்லை என சம்பந்தப்பட்ட பேராசிரியர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இனவாத அடிப்படையில் தொல்லியல் திணைக்களம் செயற்படவில்லை என்பதைக் காட்டிக் கொள்வதற்கான ஒரு உபாயமாகவே இந்தச் செய்தியை திட்டமிட்ட முறையில் அரசாங்கம் வெளியிட்டதாகக் கருதப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தீவுப் பகுதிகளை மையப்படுத்தியதாக தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகள் அண்மைக் காலத்தில் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றது. நயினாதீவைப் பொறுத்த வரையில் அதன் பழமையும் பெருமையும் அனைவருக்கும் தெரியும்.

ஆனால், அங்கு அமைக்கப்பட்ட பௌத்த விகாரையைத் தான் முக்கியமானதாகக் கூகுள் வரைபடத்தில் காட்டிக்கொள்வதற்கான உபாயங்களையும் அரசாங்கம் வகுத்துச் செயற்படுகின்றது. கச்சதீவில் இரகசியமான முறையில் அமைக்கப்பட்ட பாரிய புத்தர் சிலையில் பெரும் சர்ச்சையை உருவாக்கியிருக்கின்றது. நெடுந்தீவில் உள்ள வெடியரசன் கோட்டையை சிங்கள பௌத்த அடையாளமாகக் காட்டிக் கொள்வதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தப் பின்னணியில் சைவத் தமிழர்கள் இப்போது எதிர்வினையாற்றத் தொடங்கியிருப்பது தான் அரச தரப்பையும் சிங்கள பௌத்த மயமாக்கலை முன்னெடுக்கும் திணைக்களங்களையும் சங்கடத்துக்குள்ளாக்கியிருக்கின்றது. அவர்கள் இலக்கு வைக்கும் பல இடங்களில் நடராஜர் சிவன், சிவலிங்கம் என சிலைகள் வைக்கப்படுகின்றது. குறிப்பிட்ட பகுதிகள் தமது ஆளுகைக் குட்பட்டவை என்பதைக் காட்டிக் கொள்வதற்கான ஒரு உபாயமாக இதனை அவா்கள் முன்னெடுக்கின்றார்கள். அதாவது இருப்பைப் பாதுகாப்பதற்கு இவ்வாறு செய்ய வேண்டியிருக்கின்றது.

இதில் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியிருப்பது யாழ்ப்பாணம் பண்ணை சுற்று வட்டப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நயினை நாகபூசணி அம்மனைப் பிரதிபலிக்கும் சிலை. நயினாதீவு உட்பட அனைத்துத் தீவுகளுக்கும் செல்வதற்கான ஒரே நுளைவாயிலாக இருப்பது பண்ணைப் பகுதி தான். தீவுப் பகுதிக்குச் செல்பவர்கள் மனதில் நாகபூசணி அம்மன் பதிய வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு இந்த சிலை அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கலாம். அல்லது புத்தர் சிலை ஒன்று அங்கு வைக்கப் படலாம் என்பதால், அதனை முந்திக் கொண்ட செயற்பாடமாகவும் இருக்கலாம்.

புத்தாண்டு தினத்தன்று அதிகாலையில் இந்தச் சிலை பண்ணை சுற்று வட்டப் பகுதியில் கம்பீரமாகக் காணப்பட்ட போது, அது இந்தளவுக்கு சர்ச்சையை ஏற்படுத்தும் ஒரு விடயமாக மாறும் என யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

இந்த சிலையை அமைத்தது யார் என்பது இன்றுவரை தெரியவில்லை. ஆனால், அது திடீரென அமைக்கப்பட்ட ஒன்றல்ல என்பது அந்தச் சிலையைப் பார்க்கும் போது தெரிகின்றது. மிகவும் நேர்த்தியாக சிறப்பான சிற்ப வேலைப்பாடுகளுடன் அந்தச் சிலை அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்தச் சிலை அமைக்கப்பட்ட பின்னர் உருத்திரசேனை என்ற அமைப்பினர் அதற்கு பாலாபிஷேகம் செய்யப் போய் பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டார்கள். அந்த அமைப்பின் உறுப்பினர்கள் யாழ்.



பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு மூன்று மணி நேரத்துக்கும் அதிகமாக விசாரணைக்குள்ளாக்கப்பட்டனர் அந்த சிலையை செய்தது யார் என்பதோ அல்லது அங்கு கொண்டு வந்து வைத்தது யார் என்பதோ தமக்குத் தெரியாது எனத் தெரிவித்த உருத்திரசேனை அமைப்பினர் பாலா பிஷேகத்தை மட்டுமே தாம் செய்ததாகக் கூறியிருக்கின்றார்கள்.

இந்த சிலையை அகற்றுவதற்காக பொலிசார் மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை. அதனையடுத்து நீதிமன்ற உத்தரவை அவர்கள் பெற்றார்கள். கடந்த செவ்வாய்கிழமை இந்த வழக்கு யாழ். நீதிமன்றத்துக்கு வந்த போது, மே மாதம் 4 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் விசாரிக்கப்பட்ட இந்த வழக்கில் இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள் சார்பில் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன், என். சிறிகாந்தா உள்பட 15 வரையான சட்டத்தரணிகள் முன்னிலையாகினர். முறைப்பாட்டாளர் இன்றி பொலிசார் இந்த வழக்கை தொடுக்க உரிமை இல்லை என்ற கருத்தை சட்டத்தரணி சுமந்திரன் முன்வைத்து வாதத்தை தொடக்கினார்.

தொலைபேசி மூலம் தமக்கு முறைப்பாடு கிடைத்ததாகவும் வன்முறைகள் ஏதும் ஏற்படக்கூடாது என்று தெரிவித்தே தாம் வழக்கு தொடுத்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து சட்டத்தரணிகள், சுமந்திரன், சிறீகாந்தா ஆகியோர் வாதங்களை முன்வைத்தனர். சிலை வைக்கப் படுவதில் தமக்கு ஆட்சேபனை இல்லை என்றும் ஆனால், அதற்கு உரிய அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து வழக்கு தொடர்பில் எழுத்து மூல சமர்ப்பணங்களை செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து இந்த வழக்கை எதிர்வரும் மே 4ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். இந்த விவகாரத்தில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து செயற்பட்டிருந்தமை மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்திருக்கின்றது. இந்து அமைப்புக்களும் விட்டுக் கொடுப்பதில்லை என்ற உறுதிப்பாட்டுடன் தான் நீதிமன்றத்துக்குச் சென்றிருந்தார்கள்.

பண்ணைப் பகுதியில் அமைக்கப்பட்ட இந்த அம்மன் சிலை குறித்து புதிய வரலாற்றுத் தகவல் ஒன்றை இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவித்திருக்கின்றார். அவர் தெரிவித்திருப்பது இதுதான்

யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்த அருள்மிகு நாகபூசணித் திருவுருவம் வரலாற்றுச் சிறப்புடைடது. மகாவம்சம் கூறும் மகோதரனும் குலோதரனும் அவன் முன்னோரும் வழிபட்டது. அத்திருவுருவத்தை முதலில் அழித்தவர் போர்த்துக்கேயக் கத்தோலிக்கர். ஒல்லாந்தர் காலத்திலும் அருள்மிகு நாகபூசணித் திருவுருவத்தை மீளமைக்கவில்லை. ஆங்கிலேயர் காலத்தில் பண்ணையில் அருள்மிகு நாகபூசணித் திருவுருவத்தை மீளமைத்தனர். மகாவம்சம் கூறும் நாக மன்னர்களான மகோதரனும் குலோதரனும் முன்னோரும் வழிபட்ட திருவுருவத்தையே மீளமைத்தனர்.

பண்ணைப் பாலம் கட்ட முன்பு, படகில் மண்டைதீவு, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு செல்வோர் பண்ணைக் கடலைக் கடந்தனர். அருள்மிகு நாகபூசணி திருவுருவத்தை வணங்கியே வழிபட்டே படகுகளில் ஏறினர். அங்கிருந்து படகுகளில் வந்து கரையிறங்கி யாழ்ப்பாணம் செல்வோரும் வணங்கி வழிபட்டு மாநகர் புக்கனர் இவ்வாறு மறவன்புலவு சச்சி சொல்லியிருக்கின்றார்.

சிலைகள் தமிழ் சிங்கள மக்களை அவர்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளிலிருந்து திசை திரும்ப வைக்கின்றது. தமிழ்த் தலைமைகள் அரசியல் தீர்வு, அதிகாரப் பரவலாக்கல் என்பவற்றை விட்டு விட்டு உள்ள சிலைகளைப் பாதுகாப்பதிலும், புதிய சிலைகளை வைப்பதிலும் கவனத்தை குவித்துள்ளார்கள்.

சிங்கள மக்களும் அடிப்படைப் பிரச்சினைகளிலிருந்து சற்று விலகி தொல்பொருள் திணைக்களத்தின் சாகசங்களைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கின்றார்கள். அரசாங்கம் எதிர் பார்ப்பதும் இதனைத் தானோ?

# இளையோரை ஆற்றுப்படுத்துவது யார்?

இன்றைய இளைய தலைமுறையை ஆற்றுப்படுத்துவது எப்படி? அவர்களைக் கையாள்வது எவ்வாறு? அவர்களுடைய எதிர்காலத்தைப் பாதுகாப்பது எங்ஙனம்? என்ற கேள்விகள் இன்று பலரிடத்திலும் உண்டு. காரணம், நாட்டில் வேலை வாய்ப்பின்மையும் பொருளாதார நெருக்கடியும் இளையோரை அதிகமாகப் பாதிக்கிறது. அதை விடப் பிரச்சினை, சூழல் பாதமாக மாறியிருப்பது. பாடசாலைப் பருவத்திலேயே போதைப் பொருள் பழக்கத்துக்குள்ளாகும் அபாய நிலை உருவாகியுள்ளது. போதைப்பொருள் பாவனையினால் பாதிக்கப்பட்டோரைப் பராமரிக்கிற அவர்களுக்குப் புனர் வாழ்வளிக்கிற மையங்கள் உருவாகியுள்ளன. பெண்களுக்கு இன்னொரு பிரச்சினை. இளவயதிலேயே முறையற்ற பாலியல் தொடர்புகளால் அவர்கள் கர்ப்பமாகி விடுகின்றனர். அவர்களைப் பராமரிப்பதற்காக மாவட்டந் தோறும் பராமரிப்பு நிலையங்களை அரசாங்கமே உருவாக்கி வைத்துள்ளது.

இதை விட இன்னொரு பெரும் பிரச்சினை, இளையோரிடத்திலே காணப்படுகிற வன்முறைகள். ஆவா குறூப் தொடக்கம் பல ஆயுதக் குழுக்கள் அடிதடி, வாள் வெட்டு, கொலை முயற்சி என்று நம் கண் முன்னாலேயே இயங்கிக் கொண்டிருப்பது. இதனால் பெற்றோர் நிம்மதியற்றிருக்கின்றனர். நம்முடைய பிள்ளையும் இப்படி ஏதாவது ஒன்றில் சிக்கி விடுமோ என்ற கலக்கம். இதனால் சமூக அக்கறையுடையோர் தலையைப் பிய்த்துக் கொள்கிறார்கள். பொலிஸ் மற்றும் நீதித்துறையினர் கலங்கிப் போயிருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் காரணம், இளையோரை ஆற்றுப்படுத்தும், வழிப்படுத்தும் செயற்பாடுகளும் கட்டமைப்புகளும் இன்று இல்லாமற் போயிருப்பது. அல்லது அவை தளர்ந்திருப்பதாகும்.

முன்னர் கிராமங்கள் தோறும் சனசமூக நிலையங்களோ முன்னேற்றச் சங்கங்களோ இருக்கும். அல்லது விளையாட்டுக் கழகங்கள் இருக்கும். அல்லது மதம் சார்பான மன்றங்கள் இருக்கும். அல்லது இலக்கிய அமைப்புகள், நாடக மன்றங்கள் இயங்கிக் கொண்டிருக்கும். இந்த அமைப்புகள் அல்லது மன்றங்களின் பெயரிலேயே இளையோரின் துடிப்பைக் காண முடியும். புதியன விளை தலைப் பார்க்க முடியும். பாரதி சனசமூக நிலையம், மறுமலர்ச்சி மன்றம், காந்தி வாசிகசாலை, வாலிப முன்னேற்றச் சங்கம், அண்ணா படிப்பகம், கிராம அபிவிருத்திச் சங்கம். இப்படிப் பல பெயர்களில்.

இவற்றில் ஏதோ ஒன்றில் இளைய தலைமுறையினர் நிச்சயமாகத் தொடர்புபட்டிருப்பர். இவை அவர்களை ஆற்றுப்படுத்தும், வழிப்படுத்தும். இதனால் கலை, இலக்கியம், விளையாட்டு, பொதுப்பணிகள், ஊர் முன்னேற்றத்துக்கான செயற்பாடுகளில் இளைய தலைமுறை உற்சாகமாக ஈடுபடும். அல்லது அரசியல் இயக்கங்களும் செயற்பாட்டு மையங்களும் அன்று சிறப்பான முறையில் இருந்தன. அவை இளையோரை சமூகப் பிரக்ஞை உள்ளோராக வளர்த்தெடுத்தன. சாதியொழிப்பு, சமூக நீதி, குடிநீர்ப்பிரச்சினை என சமூகப் பிரச்சினைகளிலும் சமூகத் தேவைகளிலும் முன்னின்று செயற்பட வைத்தன. ஒரு காலத்தில் விடுதலை இயக்கங்களுக்குச் சென்றவர்களில் பெரும்பாலானோர் வாசிகசாலை அல்லது சனசமூக நிலையங்களைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர்.

இன்று இந்தச் சூழலே இல்லாமற் போய் விட்டது. யுத்தமும் பிற நிலவரங்களும் இதை மாற்றிவிட்டன. மூத்த தலைமுறைக்கும் இளைய தலைமுறைக்கும் இடையிலான வெளி அதிகரித்து விட்டது. உலகமயமாதலில் இன்றைய தொழில் நுட்பமும் ஊடகக் கலாச்சாரமும் இதற்கொரு வலுவான காரணமாக இருந்தாலும் அதையும் கடந்து, இளைய தலைமுறையை ஆற்றுப்படுத்தும் வழிப்படுத்தும் செயற்பாட்டு மையங்கள் தளர்வடைந்துள்ளமையே பிரதான காரணமாகும். எல்லாவற்றையும் வணிகமாகப் பார்க்கின்ற நிலை வளர்ந்துள்ளது. பெற்றோரே பிள்ளைகளை போட்டி உலகத்துக்குத் தயார்ப்படுத்துகின்ற அதற்குள் தள்ளி விடுகின்ற அவலச் சூழல் உருவாகியுள்ளது.

நான்கு ஐந்து வயதிலிருந்தே பிள்ளைகளை படிப்புப் படிப்பு என்று ஓய்வின்றி ஓட வைக்கின்ற நிலை வளர்ந்துள்ளது. அவர்களை நெருக்கடிக்குள்ளாக்குகின்ற



போக்கு உருவாகியுள்ளது. இதனால் பிள்ளைகளுக்கான இயல்புச் சூழல் மறுதலிக்கப்படுகிறது. அவர்கள் பதின்பருவத்தை எட்டும்போது அவர்களுடைய சுயாதீன நிலைக்குரிய வயதை அடையும்போது இந்த நெருக்கடியிலிருந்து விடுபட விரும்புகிறார்கள். அதற்கான வாய்ப்பு வீட்டிலும் சமூகத்திலும் இல்லாத நிலையில் அவர்கள் திமிறிக் கொண்டு வன்முறையில் ஈடுபடுகிறார்கள். அல்லது தேவையில்லாத பிரச்சினைகளில் சிக்கி விடுகிறார்கள். இதொரு கையறு நிலையே.

இன்றைய இளைய தலைமுறையினரைக் குறித்த ஆய்வுகளில் இந்தக் காரணங்களே கண்டறியப்பட்டுள்ளன. அப்படியென்றால் இதை எப்படி மாற்றி அமைப்பது? பாதுகாப்பது? அவர்களை எப்படி ஆற்றுப்படுத்துவது? என்ற கேள்விகள் எழுகின்றன. இன்றைய இளைய தலைமுறையின் தேவை என்ன? அவர்களுடைய ஈடுபாடுகள் எப்படியானவை? அவர்களுடைய உலகம் எப்படியானது? என்பதைக் குறித்த ஆழமான புரிதல் நமக்குத் தேவை. இதற்கு உலகளாவிய ரீதியில் உருவாகியிருக்கின்ற வளர்ச்சியும் பண்பாட்டுப் போக்கும் எப்படி உள்ளது என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும். இந்த அறிதலின் மூலம் பெறுகின்ற விடயங்களை நம்முடைய சமூகச் சூழலுக்கு ஏற்ற மாதிரி பொருத்திக் கொள்ள வேண்டும். அல்லது இவைகளை அடிப்படையாகக் கொண்டு புதியவைகளை உருவாக்க வேண்டும். இது காலத்தின் நிபந்தனையாகும்.

அப்படியென்றால், எங்களுடைய சமூகத்திலே எல்லாமே அழிந்து விட்டனவா?'' என்ற கேள்வியைச் சிலர் கேட்கக் கூடும். அப்படியென்றால், எப்படி இவ்வளவு வன்முறையும் சீரழிவும் உருவானது? இளைய தலைமுறையைக் குறித்த உங்களுடைய பதட்டம் ஏன்?'' என்ற பதில் கேள்விகளைத்தான் நாம் கேட்க முடியும்.

இன்றும் சமூகத்திலே விளையாட்டுக் கழகங்களும் கிராம முன்னேற்றச் சங்கங்களும் உள்ளனதான். அங்கங்கே ஒரு சில வாசகசாலைகள் இயங்கிக் கொண்டுதானுள்ளன. சில இடங்களில் கலைச் செயற்பாடுகள் நடக்கின்றன. அன்றைய நாடக மன்றங்களின் இடத்தை இன்று யுடியூ ப்பும் குறும் படங்களும் எடுத்துள்ளன. இதற்கான நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் ஒரு தரப்பு உருவாகியுள்ளது.

அப்படியான இடங்களில் சூழலில் பிரச்சினைகளும் குறைவு. அல்லது இல்லை எனலாம். ஏனென்றால் அங்கே இளையோர் ஆற்றுப்படுத்தப்படுகின்றனர்.

இதில்லாத இடங்களில் கொந்தளிப்பும் பிரச்சினையுமே. இந்தச் சூழலில் தான் நாம் பண்டத்தரிப்பிலுள்ள மறுமலர்ச்சி மன்றம், கொக்குவிலில் உள்ள வளர்மதி முன்னேற்றச் சங்கம் போன்றவற்றைப் பற்றி ஆழமாகக் கவனிக்க வேண்டும். பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றம் ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. கொக்குவில் வளர்மதி முன்னேற்றச் சங்கம் அறுபதாவது ஆண்டில் கால் வைக்கிறது. இரண்டும் இன்றும் புத்திளமையோடு இயங்குகின்றன.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு மறுமலர்ச்சி மன்றம் பெரிய அளவில் கலை, இலக்கிய, விளையாட்டுத்துறைகளுக்கான போட்டிகளை நடத்தியது. மிகப் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட்டன. வெற்றிபெற்ற சிறுகதை ஒன்றுக்கு ஐம்பது ஆயிரம் ரூபாய் என்ற கணக்கில் இந்தப் பரிசுகள் அமைந்திருந்தன. பரிசு பெற்ற கதைகளைத் தொகுத்து மறுமலர்ச்சிக் கதைகள் என்ற பேரில் சிறுகதைத் தொகுதி ஒன்றும் வெளியிடப்பட்டது. பெரிய அளவில் ஆண்டு நிறைவு விழாவும் நடந்தது. மன்றத்தை உள்ளூரில் உள்ளவர்களும் புலம் பெயர்ந்திருக்கும் உறவுகளும் வளப்படுத்தி வருவதே இதற்குக் காரணமாகும். இன்னொரு காரணம், மறுமலர்ச்சி மன்றம் 1980 களிலிருந்தே காலைக்கதிர் என்றொரு சஞ்சிகையை வெளியிட்டு வந்தது. யுத்தத்தின் காரணமாக அது இடை நின்று போனாலும் அதன் செயற்பாட்டு முனைப்பு தொடர்ந்து கொண்டேயிருந்தது. அதன் விளைவே இதுவாகும்.

இதைப்போல இப்பொழுது கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகம் மிகப் பெரிய அளவிலான போட்டிகளை கலை, இலக்கியம், விளையாட்டுத் துறைகளில் நடத்துகிறது. இதற்காக அது ஏறக்குறைய 20 லட்சம் ரூபாய் அளவில் செலவு செய்கிறது. தலா ஒரு லட்சம் ரூபாய் பரிசை ஒவ்வொரு துறையிலும் வெற்றியீட்டுவோருக்கு வழங்குகிறது. எல்லாப் போட்டிகளும் இளையதலைமுறையினருக்காகவே நடத்தப்படுகின்றன. அவர்களை வழிப்படுத்தவும் மேம்படுத்தவுமே சிந்திக்கிறது வளர்மதி. இதனால்தான் இதை இங்கே சிறப்பாகக் குறிப்பிடவும் வேண்டியுள்ளது.

வளர்மதி முன்னேற்றக் கழகம் 1980 களில் உள்ளம் என்ற ஒரு இதழை வெளியிட்டது. இப்பொழுதும் அந்த இதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது. 1989 இலிருந்து இன்று வரையில் முப்பதுக்கு மேற்பட்ட இதழ்கள் வெளிவந்திருக்கின்றன. இதழின் தொடர்ச்சியை யுத்தமும் அதன் விளைவான இடப்பெயர்வு, புலப் பெயர்வுகளும் தடைப்படுத்தின. இருந்தாலும் அதை மீள மீளக்கொண்டு வர வேண்டும் என்ற முனைப்புக் குறையவில்லை. அதனால் தான் இப்பொழுது உள்ளத்தின் மீள் வருகை சாத்தியமானது. இதற்குக் காரணம், சமூக அக்கறையே. அதிலும் இளையதலைமுறையினரைக் குறித்த கரிசனையே.

கலை, இலக்கியம், அறிவியல் துறைகளை மையப்படுத்திய இதழ் உள்ளம். உள்ளம் இதழே இப்பொழுது மிகப் பெரிய அளவிலான பண்பாட்டு நிகழ்ச்சியையும் நடத்துகிறது. எதிர்வரும் 09.04.2023 அன்று வவுனியாவில் நடக்கவுள்ள இந்தப் பண்பாட்டுப் பெருவிழாவில் இந்தியாவிலிருந்து கதை சொல்லியும் எழுத்தாளருமான பவா செல்லத்துரை சிறப்பாளராகக் கலந்து கொள்கிறார். இங்கே தான் போட்டிகளில் வெற்றியீட்டிய விளையாட்டுக் கழகங்களுக்கும் வெற்றியாளர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படுகின்றன. இதை விட நாடகம், இசை நிகழ்ச்சிகள், பங்களிப்புகளுக்கான விருதுகள் எனப் பலவும் நிகழவுள்ளன.

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



இந்தப் பண்பாட்டுப் பெருவிழா இளைய தலைமுறையின் உள்ளத்திலும் நடத்தைகளிலும் வாழ்விலும் பண்பாட்டை உருவாக்கும் நிகழ்வாகவே வடிவமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இளையோரைக் குறித்து கவலைப்படுவதை விடுத்து, அவர்களைக் கண்டனம் செய்வதையும் முகம் சுழிப்பதையும் விட்டு விட்டு அவர்களுடைய எதிர்காலத்தை எப்படி வடிவமைக்கலாம். அல்லது அதற்கு எப்படித் தூண்டலாகவும் பக்க பலமாகவும் இருக்கலாம் என்பதற்கு இந்த நிகழ்வு சான்று. அவர்களை இந்தத் துறைகளில் ஈடுபட வைப்பது, பங்கேற்றச் செய்வது என்பவற்றின் மூலமாக ஒரு நல்ல தொடர்புறுத்தலை உள்ளமும் வளர்மதி முன்னேற்றச் சங்கமும் செய்கின்றன. இப்படி ஊர்கள் தோறும் அமைப்புகளும் மன்றங்களும் சிந்தித்துச் செயற்பட்டால் மாற்றம் அதிக தொலைவில் இல்லை.

இதில் இன்னொன்றையும் சேர்த்திருக்கலாம். இளைய சாதனையாளர்கள், தொழில் முயற்சிகளுக்கான மதிப்பளிப்பு. அது முன்னோடிகளை, முன்னுதாரணர்களை அறிமுகப்படுத்துவதாகவும் ஊக்கப் படுத்துவதாகவும் இருந்திருக்கும்.

ஊருக்கு நாலுபேர் நல்லவர்களா இருந்தால் ஊர் மட்டுமல்ல, இந்த உலகமும் உய்யும் என்பார்கள். அதை உள்ளம் உணர்ந்து செயற்படுகிறது.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை என்றும் ஆனால் அதற்கு உரிய அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து வழக்கு தொடர்பில் எழுத்துமூல சமர்ப்பணங்களை செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து இந்த வழக்கை எதிர்வரும் மே 4ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

நடந் இந்தவழக்கில் இந்து அமைப்புகளின் பிரதி நிதிகள், அரசியல் பிரதிநிதிகள், ஆதரவாளர்கள் என சுமார் 60 பேர் வரையிலானவர்கள் நீதி மன்றில் பார்வையாளர்களாக பங்கேற்றிரு ந்தனர்.

இதேவேளை நீதிமன்றத்தை சூழ அதிகளவான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டிருந்தது. புத்தாண்டு தினத்தில் தீவகத்துக்குச்செல்லும் ஒரே பாதையில் பண்ணை சுற்றுவட்டத்தில் நயினாதீவு நாகபூசணி அம்மனைப் பிரதிபலிக்கும் விதமாக சிலை ஒன்று நிறுவப்பட்டிருந்தது. நிறுவியது யார் என்று தெரியாத நிலையில் அதை அகற்றுவதற்கு பொலிஸார் நீதிமன்ற உத்தரவை பெற்றுஅறிவித்தலை ஒட்டியிருந்தனர்.

# தமிழர்களின் கடவுள்களையும் நிலங்களையும் காத்த யுத்தம்

வடகிழக்கு தமிழ் மக்கள் கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக கொடிய உள்நாட்டுப் போரை சந்தித்திருந்ததை விடவும் மிக மோசமான நெருக்கடிகளையும் மத ரீதியிலான மேலாதிக்கத் திணிப்பையும் நில ஆக்கிரமிப்பையும் யுத்தம் நிறைவுற்றிருக்கின்ற இந்த 13வருட கால எல்லையில் எதிர் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இந்த நிலையும் போக்கும் கூட ஒரு வகையில் தமிழ் மக்கள் மீது ஆட்சியாளர்களினால் மேற் கொள்ளப்படுகின்ற ஒருவகை யுத்தத்தைப் போன்றதே.

வடகிழக்கு பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியான சமபலத்துடன் காணப்பட்டிருந்த போதும் அவர்களின் முழுமையான கட்டுப்பாட்டு பிரதேசங்களாக வடகிழக்கு மாகாணங்களின் கணிசமான நிலப் பகுதிகளும் பிரதேசங்களும் அவர்களின் அதிகார ஆளுகைக்குள்ளேயே இருந்தன.

அவ்வாறான நிலைமைகளில் சிங்கள – பௌத்த மத ரீதியிலான ஆக்கிரமிப்பை அரசாங்கத்தினால் முன்னெடுக்க முடியாத, அச்செயலை எண்ணிப்பார்க்க முடியாத சூழலே இருந்தது. அவ்வாறான சிந்தனையும் நிகழ்ச்சி நிரலும் ஆட்சியாளர்களுக்கு இருந்த போதிலும் அவர்களின் அவ்வாறான பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளை, திட்டங்களை முறையாக செயற்படுத்தும் ஆற்றலுக்கு வட,கிழக்கில் நிலவியிருந்த யுத்த சூழ்நிலைகளும் அதனுடன் தொடர்புடைய அசாதாரண நிலைமைகளும் ஆட்சியதிகாரத்திலிருந்த சிங்கள தலைவர்களுக்கு கை கொடுத்திருக்கவில்லை. அதனால், வட, கிழக்கு பிரதேசங்களில் மதத்தின் பெயரால் பௌத்தத்தின் அடையாளத்தோடு தமிழ் மக்களின் நிலங்களை துரிதமாக கையகப்படுத்த அவர்களினால் முடிந்திருக்கவில்லை.

ஆனால் 2009இல் இறுதிப் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டவுடன் தாம் நினைத்தவாறு பௌத்த மயமாக்கலை, திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்களை வடக்கு, கிழக்கில் பரந்தளவில் முன்னெடுக்கும் நிலையினூடாக தமிழ் மக்களின் இனத்துவ அடையாளங்களை முழுமையாக அழிப்பதில் முழுக் கவனத்தையும் செலுத்தியிருக்கிறார்கள்.

அவ்வாறான நிலைமைகளின் தொடர்ச்சியான ஆக்கிரமிப்பும் மத அழிப்புச் செயற்பாடுகளும் இன்று வவுனியா வடக்கு வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர், ஆதிசிவன் கோயிலின் விக்கிரகங்கள் அனைத்துமே அடித்து நொறுக்கப்பட்டு அவ்விடத்தில் அவ்வாறானதொரு ஆலயம் வரலாற்று ரீதியாக இருந்திருக்கவில்லையென்பதை பறைசாற்றும் வகையில் காரியங்கள் அனைத்தும் கச்சிதமாக நடைபெற்று முடிந்திருக்கின்றன.

இந்நிலையானது இந்து மக்களை பொறுத்தவரை தமிழர்களை பொறுத்தவரை அவர்களுக்கு பாரிய மன உளைச்சலையும் அவமதிப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது.

2009 உள்நாட்டுப் போரின் அன்றைய வெற்றியென்பது இந்நாட்டில் ஒரு தரப்பிற்கு சிறந்த அனுகூலங்களையும் அப்போரினை நேரடியாக சந்தித்திருந்த வட,கிழக்கு தமிழ் மக்களுக்கு, சமூகத்திற்கு என்றுமே எவரினாலும் ஆற்றுப்படுத்த முடியாத மனக்காயங்களையும் நினைத்துப் பார்க்க முடியாத இழப்புகளையும் ஏற்படுத்தியிருக்கிறது. அத்தோடு யுத்தத்துடன் தொடர்புபட்ட பல்வேறுபட்ட உண்மைகள் சர்வதேசத்திற்கும் இந்நாட்டின் ஆட்சியாளர்களுக்கும் பல்வேறான விடயங்களை அரசியல் ரீதியாக கோடிட்டுக் காட்டியிருக்கிறது. யுத்தமொன்றை எதிர் கொண்ட நாடு, மக்களென்ற அடிப்படையில் நம்பிக்கையற்றுப் போயிருக்கும் மக்களிடமே நல்லிணக்க முயற்சிகளை துரிதமாகக் கட்டியெழுப்பும் நோக்கில் உலக நாடுகள் பலவற்றிடமிருந்து அவர்களின் அனுபவ ரீதியான முன்மாதிரியை பெற்றுக் கொள்வது போன்ற ஒரு பிரமையை மட்டும் உருவாக்க முயற்சிக்கின்றார்கள். அவ்வாறான முயற்சிகளில் உண்மை மற்றும் நேர்மைத் தன்மை இருக்கின்றதோ இல்லையோ அத்தகைய செயற்பாடுகளுக்கு நேரெதிரான நடவடிக்கைகளையும் கூட சமாந்தரமாக முன்னெடுப்பதை உண்மையில் ஆசியாவின் ஆச்சரியமாகவே பார்க்க வேண்டியிருக்கிறது.



வவுனியா வடக்கு வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர். ஆலயத்திற்கு இன்று ஏற்பட்டிருக்கின்ற அவலம் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளையும் தமிழர்களின் வரலாற்று முக்கியத்துவமான மத அடையாளங்களையும் முற்றாக அழிக்கின்ற போக்கையும் நெருக்கடியான நிலைமைகளையுமே புடம்போட்டுக் காட்டியிருக்கிறது.

அப்பிரதேசம் நீதிமன்றத் தடையுத்தரவின் பிரகாரம் எவருமே அங்கு செல்ல முடியாத, வழிபட முடியாத அதுவும் அவ்வாலயத்திற்கு பூஜைகள் செய்யும் அர்ச்சகர் கூட உட்செல்ல முடியாத சூழலில் எவ்வாறு அங்கு இவ்வாறெல்லாம் ஒரு குழுவினர் திட்டமிட்டு ரகளைகளை ஏற்படுத்த முடியுமென்பது பொதுவாகவே அனைவருக்கும் ஏற்படக்கூடிய நியாயமான சந்தேகம். இந்நிலைமையானது தமிழ் மக்களின், .ந்து மதத்தின் அடி மடியிலே கை வைப்பதற்குச் சமமானது.

இவ்வாறான சம்பவங்களுக்குப் பின்னால் ஏதோவொரு அரசியல் பின்புலமும் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலும் இருந்தேயாக வேண்டுமென்பதை சாதாரணமாக எவராலும் புரிந்து கொள்ள முடியும். இதனுடன் தொடர்புபட்டவர்களுக்கு அரச தரப்பின் நேரடி, மறைமுக ஆசீர்வாதங்களில்லாமல் இது போன்ற சம்பவங்கள் எவ்வகையிலும் நடைபெற்றிருக்க முடியாதென்பதே பலரினதும் பொதுவான கருத்தாக அமைந்திருக்கின்றது.

ஏனெனில், இச்சம்பவம் நடைபெற்றிருக்கின்ற வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயமும் அதன் சூழலும் படைத் தரப்பினரின் முழுமையான கட்டுப்பாட்டிற்குள் அமைந்திருக்கின்றமை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ,ரட்டிப்பான சந்தேகத்தினை ஏற்படுத்தியிருக்கிறது. அப்பிரதேசத்தை தமது முழுமையான கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்ற பாதுகாப்புத் தரப்பினருக்குத் தெரியாமல் அவர்களின் கண்காணிப்பையும் கட்டுப்பாட்டையும் மீறி இத்துரதிர்ஷ்டவசமான சம்பவம் நடைபெற்றிருப்பது உண்மையில் வியப்பும் ஆச்சரியமுமே.

இந்நிலைமை தொடர்பில் துரிதமான விசாரணைகளுக்கு பணிப்புரை விடுத்திருக்கின்ற ஜனாதிபதி, அடித்துடைக்கப்பட்ட சுவாமி விக்கிரகங்களை அவ்விடத்திலேயே பிரதிஷ்டை செய்யுமாறும் உத்தரவு பிறப்பித்திருக்கிறாரென்ற செய்தியையும் ஊடகங்கள் வாயிலாக அறிய முடிந்தது.

இவ்விவகாரம் தொடர்பில் பலரும் தத்தமது கண்டனங்களையும் கருத்துகளையும் பதிவு செய்திருந்த நிலையிலே அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஜீவன் தொண்டமான் போன்றோர் கடந்த வாரம் ஸ்தலத்திற்கு விரைந்து நிலைமைகளை ஆராய்ந்து சென்றிருக்கின்றனர். இருப்பினும் ,இந்நிலைமை தொடர்பில் எதிர்காலத்தில் எவ்வாறான முடிவுகள் அரசாங்கமென்ற வகையில் விரைந்து எடுக்கப்படுமென்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டியிருக்கிறது.

இதுபோன்ற சம்பவங்கள் வடக்கு கிழக்கில் எத்தனையோ முறை அடாவடியாக நடைபெற்று முடிந்திருக்கின்றன. அவ்வாறான சம்பவங்கள் எதற்குமே இதுவரை எந்தவித நியாயமான தீர்வும் நீதியும் பெற்றுக் கொடுக்கப்பட்ட எந்தப் பதிவுகளும் இலங்கைத் தீவில் பதிவாகவில்லை. இதற்கு உதாரணமாக குருந்தூர்மலை விவகாரத்தைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

அங்கு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட விகாரைக்கான கட்டுமானப் பணிகளை உடன் இடைநிறுத்துமாறு நீதிமன்றத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தும்கூட அவ்விகாரை எந்தவித தங்கு தடையுமின்றி கட்டுமானப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு அவ்விகாரை முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது என்றால், இந்நாட்டில் அனைவருக்கும் பொதுவான சட்டத்தை துஷ்பிரயோகம் செய்பவர்கள் யார்? அவர்களுக்கிருக்கும் அரசியல் பின்னணி என்ன?

இதுபோன்ற நீதிமன்ற தடையுத்தரவை தமிழர்கள் எவராவது மீறியிருந்தால் அவர்களுக்கு உண்மையில் என்ன நடைபெற்றிருக்குமென்பதை எண்ணிப் பாருங்கள்? ,துதான் இலங்கைத் தீவின் சட்டத்தின் நிலைமை.

அதுமட்டுமன்றி பலாலி ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய விக்கிரகங்கள் மாய மாக மறைந்துள்ளதாகவும் அதே போல், தெல்லிப்பழை பிரதேசத்திலுள்ள ஆலயமொன்றிலிருந்தும் விக்கிரகங்கள் மாயமாகியுள்ளதாகவும் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அறியக் கிடைக்கிறது. இச்சம்பவங்களில் படைத் தரப்பினரே தொடர்புபட்டிருப்பதாக ஆலய நிர்வாகத்தினர் பகிரங்கமாகவே குற்றம் சாட்டியிருக்கின்றனர். ஏனெனில், பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருக்கின்ற போது எவ்வாறு ஆலயத்தினுள் இருந்த விக்கிரகங்கள் காணாமல் போகுமெனவும் கேள்வியெழுப்பியிருக்கிறார்கள். தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை அடாத்தாக கைப்பற்றி சிங்களக் குடியேற்றங்களை வட–கிழக்கு முழுவதும் விஸ்தரிப்பதே சிங்களத் தலைவர்களின் தீவிரமான நிலைப்பாடாகவும் கொள்கையாகவும் இருக்கிறது.

இவ்வார முற்பகுதியில் கூட முல்லைத்தீவு கரைதுரைப்பற்று கருநாட்டுக்கேணியில் தமிழ் மக்களுக்கு உரித்தான காணிகள் 180 சிங்களக் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும் பிந்திய செய்தியொன்றும் வெளியாகியிருக்கிறது.

இவையெல்லாவற்றையும் தொகுப்பாகக் கூறுவதானால், இந்த சிங்கள தேசமும் ஆட்சியாளர்களும் என்றுமே திருந்தப் போவதில்லை. தொல்பொருளென்ற போர்வையில் தமிழர்களுக்கும் அவர்களின் உரித்துடைய நிலங்களுக்கும் மத அடையாளங்களுக்கும் தொடர்ச்சியாக நடைபெறுகின்ற அபகரிப்புகளும் அத்துமீறல்களும் கையகப்படுத்தல்களும் மிகக் கொடுமையான நிலையாக தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இவ்வாரம் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வுகளிலும் கூட பௌத்த ஆக்கிரமிப்பு தொடர்பான விவகாரம் சூடு பிடித்திருந்தது. மரபுரிமைகள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவையே மிக மோசமான இனவாதியென்று பிரஸ்தாபிக்கும் நிலைவரை தொல்லியலின் செயற்பாடுகள் விமர்சனத்திற்குள்ளாகியிருக்கின்றன.

இந்நிலை இன்னுமின்னும் நீடிக்கத்தான் போகிறது. வட–கிழக்கு தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் மென்மேலும் பௌத்தமயமாக்கலுக்காக கையகப்படுத்தப்படுவதற்கே அதிக சந்தர்ப்பங்கள் உள்ளன.

அதேபோல், தமிழ் மக்களின் கலை, கலாசாரம், பண்பாடுகள், மத அடையாளங்களென அனைத்தும் இனியும் தீவிரமாக சிதைக்கப்படவே வாய்ப்புகள் பிரகாசமாகத் தெரிகின்றன.

ஆக, இதுதொடர்பில் தமிழ்த் தரப்புகள் அனைத்தும் தங்களின் கட்சி, கொடி, கொள்கை, சின்னமென இனியும் தனி மேடை போட்டு சந்தைப்படுத்தாமல் தமிழ் மக்களின் எரியும் பிரச்சினைகள் தொடர்பில் உடனடி கவனம் கூட்டாக மேற்கொள்வதனூடாக மட்டுமே தமிழ் மக்களுக்கு ஓரளவு நிம்மதியை ஏற்படுத்தும்.

கட்டுரையாளர்
இலங்கையில் இருந்து
அக்கரையூரான்

# PREMIER DIAGNOSTIC NETWORK

PDXN

**647•660•0699**
www.pdxn.ca

Scan for Online Booking

## RADIOLOGY & CARDIOLOGY SERVICES

## எங்களுக்காக நாங்கள்!

**தமிழர்களின் நிர்வாகத்தில் நகரின் மத்தியில் நல்லதோர் மருத்துவ பரிசோதனை நிலையம்!**

ரேடியோலஜி, மற்றும் கார்டியோலஜி பரிசோதனைகளிற்காக நீங்கள் பரிந்துரைக்கப்பட்டால், ஆற்றலும், அனுபவமும் மிக்க நிபுணர்களின் சேவைகளை பெற்றுக்கொள்ள தமிழர்களின் நிர்வாகத்தில் நடாத்தப்படும் எங்களின் சேவைகளை நாடுங்கள்.

**தமிழில் தொடர்பு கொள்ள அழையுங்கள்**

**647-494-9909**

- X-RAY
- ULTRASOUND
- BONE DENSITY
- ECHOCARDIOGRAM
- HOLTER MONITOR
- STRESS ECG
- ABPM (24H BLOOD PRESSURE MONITORING)

## PREMIER RADIOLOGY CLINICS

### BELLESMERE X-RAY, ULTRASOUND & BMD

North of Ellesmere & Bellamy

**1920 Ellesmere Road, Suite 311 & 311A**
Scarborough, ON M1H 2V6
Tel: **416-289-2280**
Fax: **416-289-7321**

### BRIMLEY X-RAY, ULTRASOUND & BMD

South of Brimley & Sheppard

**2020 Brimley Road**
Scarborough, ON M1S 4R7
Tel: **416-299-7677**
Fax: **416-299-7948**

Access & Share Your Imaging and Reports Online: **https://pdxn.ca/page/patient-imaging**

## PREMIER CARDIAC CLINICS

Tel: **416-289-3212** • Fax: **416-289-0815**

### BELLESMERE CARDIAC CLINIC

North of Ellesmere & Bellamy
**1920 Ellesmere Road, Suite 307**
Scarborough, ON M1H 2V6

### BRIMLEY CARDIAC CLINIC

South of Brimley & Sheppard
**2020 Brimley Road**
Scarborough, ON M1S 4R7

### ACCREDITATIONS

Cardiac Echo Quality Care and Service by: CorHealth Ontario

Radiology Medical Quality and Standard of Care by: The College of Physicians and Surgeons of Ontario

Affiliated Clinical Site: UHN University Health Network; The Michener Institute of Education at UHN


Accredited Ultrsound Training Program: Accreditation Canada

Infection Control and Cleaning Process by: Public Health Ontario


### FUNDED BY

Ontario Ministry of Health & Long Term Care


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசிராசி அன்பர்களே! சுபச் செலவு அதிகரிக்கும். வாகனங்கள் பயன்படுத்தும் போது கவனம் தேவை. சிலருக்கு இடமாற்றம் உண்டாகலாம். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை நீங்கும். உத்யோகத்தில் அடுத்தவரை நம்பி பொறுப்புக்களை ஒப்படைப்பதை தவிர்ப்பது நல்லது. பெண்கள் அடுத்தவருக்கு உதவி செய்யும் போது கவனம் தேவை.



ரிஷபராசி அன்பர்களே! எதையும் சாதிக்கும் திறமையும், சாமர்த்தியமும் அதிகமாகும். புதிய நண்பர்கள் கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும். மரியாதை கூடும். தன்னம்பிக்கையுடன் செயலாற்றுவீர்கள். தொழில் வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். தேவையான பண உதவியும் கிடைக்கும். கடன் தொல்லை குறையும். தொழில் போட்டிகள் நீங்கும். உததீயோகத்தில் எதிர் பார்த்த பதவி உயர்வு கிடைக்கும்.



மிதுனராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். தடைகள் அனைத்தையும் தகர்ப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் இருந்த மந்த நிலை மாறும். பணவரவு நிதானமாக இருக்கும். மற்றவர்கள் உங்கள் மேல் கொண்டிருந்த கோபம் அகலும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். புதிய தொழில் ஆரம்பிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிதானம் தேவை.




கடகராசி அன்பர்களே! தேவையற்ற வீண் படபடப்பு ஏற்படும். நீண்ட நாட்களாக வாங்க வேண்டும் என்று எண்ணிய பொருட்களை வாங்குவீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பாக இருந்து வந்த குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திட்டமிட்டு காரியங்களை செய்து எதிர்பார்த்த வெற்றியை அடைவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் உண்டாகும்.



சிம்மராசி அன்பர்களே! வீண் மனக்கவலைகள் நீங்கும். கனவு தொல்லைகள் உண்டாகும். பணவரத்து திருப்தி தரும். நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும். ஆடம்பர செலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். தொழிலை விரிவுபடுத்துவதற்கான செயலில் ஈடுபடுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும்.



கன்னிராசி அன்பர்களே! எல்லா முயற்சிகளும், காரியங்களும் சாதகமான பலன் தரும். மனதில் இருந்த தயக்கம், பயம் நீங்கும். வெளியூர், வெளிநாடு பயணங்கள் செல்ல எடுக்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வும் கூடுதல் பொறுப்புகளும் கிடைக்கும். வர வேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும்.




துலாம் ராசி அன்பர்களே1 சுப நிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியங்களில் வேகம் பிறக்கும். வீடு, வாகனம் மூலம் செலவுகள் ஏற்படலாம். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் கூடும். தொழில் வியாபாரத்தில் புத்தி சாதூரியத்தால் முன்னேற்றம் காண்பீர்கள். உத்யோகத்தில் நிர்ப்பந்தமாக இடமாற்றம் அல்லது பணிமாற்றம் இருக்கலாம். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் குறையும்.




விருச்சிகராசி அன்பர்களே! எந்த காரியத்திலும் இருந்து வந்த தடை தாமதம் நீங்கும். வீண் பிரச்னைகள் அகலும். நண்பர்கள் உறவினர்களுடன் நீடித்து வந்த மன வருத்தம் நீங்கும். பயணங்கள் செல்ல நேரிடும். கூட்டு தொழில் அல்லது வியாபாரம் செய்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது. உத்யோகத்தில் வீண் அலைச்சல் உண்டாகும். வேலைப் பளு கூடும். குடும்பத்தில் அடுத்தவர்களால் ஏதேனும் குழப்பம் உண்டாகலாம்.







தனுசுராசி அன்பர்களே! பொருள் வரத்து அதிகரிக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்று வீர்கள். நண்பர்கள் மூலம் எதிர் பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் அனுகூலமாக நடந்து முடியும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் இருந்த சண்டைகள் நீங்கும். கணவன், மனைவிக் கிடையே இருந்த இடைவெளி குறையும்.



மகரராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் காரிய அனுகூலம் உண்டாகும். தேவையான நேரத்தில் மற்றவர்களின் உதவி கிடைக்கும். புதிய சொத்து வாங்குவதில் கவனம் செல்லும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும். திறமையான பேச்சின் மூலம் உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் சொல்வதை செய்வதன் மூலம் நன்மை கிடைக்க பெறுவர். குடும்பத்தில் அமைதி ஏற்படும்.



கும்பராசி அன்பர்களே! காரியங்களில் இருந்து வந்த தடை தாமதம் நீங்கும். புதிய வீடு வாகன சேர்க்கை உண்டாகும். மனதில் இருந்த குழப்பங்களுக்கு விடை கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், வேலை பளுவும் ஏற்படலாம். வார்த்தைகளில் நிதானம் அவசியம்.



மீனராசி அன்பர்களே! எல்லா காரியங்களிலும் அதிக முயற்சி மூலம் வெற்றி கிடைக்கும். கடன் பிரச்னை தீரும். தகராறு, வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். கவுரவம் அதிகரிக்கும். மறைமுக நோய் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் வேலைப் பளு குறையும். முயற்சிகள் காலதாமதமாக பலன் கொடுக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கு

17ம் பக்கத் தொடர்ச்சி) ஆனால் குறைபாடுகளையும் பிரச்சினைகளையும் கையாளுவதற்கு பதிலாக புதிய சட்டமூலம் சொத்துச் சேதம், களவு, கொள்ளை போன்ற குற்றச் செயல்களையும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் ஆகியவற்றை கட்டுப்படுத்துவதையும் உள்ளடக்கியதாக பயங்கரவாதத்தின் வரைவிலக்கணத்தை விசாலப்படுத்துகிறது.

அமைதியான முறையில் வெளிப்படுத்தப்படும் எதிர்ப்பை ஒடுக்குவதற்கும் சிறுபான்மையினரை இலக்கு வைப்பதற்கும் கொடூரமான செயன்முறைகளை தொடர்ந்து பயன்படுத்துவதற்கு அரசாங்கத்தை சட்டமூலம் அனுமதிக்கும். எதிர்ப்பியக்கத்தை ஒடுக்குவதற்கு அண்மைக் காலமாக அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்களை நியாயமற்ற முறையில் தடுத்து வைப்பதற்கு தற்போதைய பயங்கரவாத தடைச்சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்ற போக்கையும் நோக்கும்போது புதிய சட்டமும் துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடிய வெளிப்படையான பேராபத்தை உணரக்கூடியதாக இருக்கிறது.

சட்ட மூலம் சில முன்னேற்றகரமான ஏற்பாடுகளை உள்ளடக்கியிருக்கின்ற போதிலும் துஷ்பிரயோகத்துக்கு உதவக்கூடிய ஏற்பாடுகளும் இருக்கின்றன. சான்று இல்லாமல் மக்களை தடுத்து வைப்பதற்கும் தெளிவாக வரையறுக்க முடியாத உரைகளை குற்றச் செயலாக்குவதற்கும் மக்கள் ஒன்றுகூடுவதையும் அமைப்புக்களையும் நீதித்துறையின் மேற்பார்வை இல்லாமல் நியாயமற்ற முறையில் தடை செய்வதற்கும் சட்டமூலம் ஜனாதிபதியையும் பொலிசாரையும் இராணுவத்தினரையும் அனுமதிக்கும்.

இந்த சட்டமூலம் பெருமளவுக்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது 2018 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட யோசனைகளின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. மனித உரிமைகள் மீதான அக்கறைகளின் நிமித்தம் முன்வைக்கப்பட்ட விமர்சனங்களை அடுத்து 2018 சட்டமூலம் நிறைவேற்றப்படவில்லை. புதிய வரைவில் திருப்தி வெளியிட்டிருக்கும் அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தற்போதைய வடிவத்தில் எந்தவொரு பெரிய மாற்றமும் செய்யப்பட மாட்டாது என்று அண்மையில் கூறியிருந்தார்.

தங்களைப் பொறுத்தவரை நியாயமான காரணங்கள் இருப்பதாக பொலிசாரும் இராணுவத்தினரும் நம்பினால் எவரையும் தடுத்துநிறுத்தி விசாரிக்கவும் தேடுதல் நடத்தி கைது செய்யவும் எந்தவொரு ஆவணத்தையோ பொருளையோ பிடியாணையின்றி கைப்பற்றவும் அவர்களுக்கு சட்டமூலம் பரந்தளவு அதிகாரங்களை வழங்குகிறது. இராணுவத்தினரால் கைது செய்யப்படும் எவரையும் பொலிசாரிடம் கையளிப்பதற்கு அவர்களுக்கு 24 மணி நேர அவகாசம் வழங்கப்படுகிறது. சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பயிற்சி இல்லாத இராணுவத்துக்கு அத்தகைய அவகாசத்தைக் கொடுப்பது கைதிகள் துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடிய ஆபத்தை உண்டாக்கும்.

பொலிஸ் அல்லது இராணுவத்தின் ஆலோசனையின் பேரில் எந்தவொரு இடத்தையும் தடைசெய்யப்பட்ட பகுதியாக ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்த முடியும். இந்த ஏற்பாடு 2022 கொழும்பில் இடம் பெற்றதைப் போன்ற பாரிய அமைதிவழிப் போராட்டங்கள் மீண்டும் இடம்பெறாதிருப்பதை தடுப்பதற்கான ஒரு முயற்சியாக தோன்றுகிறது. பயங்கரவாத செயல்களில் ஈடுபடுமாறு அல்லது அதற்கு தயாராகுமாறு தூண்டுவதாக விளங்கிக் கொள்ளப்படக்கூடிய எந்தவொரு பேச்சையும் குற்றச் செயலாக்கக் கூடியதாக பரந்தளவு அதிகாரங்களை அரசாங்கத்துக்கு சட்டமூலம் வழங்குகிறது.

தற்போதைய பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சந்தேகநபர் ஒருவரை அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சரினால் கைச்சாத்திடப்படும் உத்தரவுகளின் பேரில் ஒரு வருட காலத்துக்கு தடுத்து வைக்க முடியும். ஆனால் புதிய சட்டமூலம் தடுப்புக்காவல் உத்தரவுகளை வழங்கும் அதிகாரத்தை பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கு வழங்குகிறது. இது பாரதூரமான துஷ்பிரயோகம் இடம் பெறுவதற்கான ஆபத்தை அதிகரிக்கிறது. சந்தேகநபரை விசாரணைக்கு முன்னரான தடுப்புக்காவலில் இருந்து தங்களின் காவலுக்கு பொலிசாரினால் திரும்ப எடுத்துக் கொள்ள முடியும். சந்தேகநபரை 'எந்தவொரு அதிகாரியின் காவலுக்கும் பாதுகாப்பு செயலாளரினால் மாற்றமுடியும். இது சந்தேகநபர் சித்திரவதைக்கும் துஷ்பிரயோகத்துக்கும் உள்ளாகக்கூடிய ஆபத்தை தோற்றுவிக்கும்.

சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்கு தொடுப்பதை தாமதிப்பதற்கு அல்லது இடைநிறுத்துவதற்கு சட்டமா அதிபர் தீர்மானிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு 'புனர்வாழ்வு' அளிப்பதற்கான திட்டங்களுக்கு ஒழுங்குவிதிகளை பிறப்பிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு புதிய சட்டமூலம் வழங்குகிறது. பிறகு சட்டமா அதிபர் எந்தவொரு குற்றச் செயல் தொடர்பிலும் குற்றவாளியாகக் காணப்படாத நபர் மீதும் புனர்வாழ்வை திணிக்கமுடியும். இதே போன்ற ஒழுங்குவிதிகளை 2021 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றம் நிறுத்தி வைத்தது குறிப்பிடத்தக்கது

மனித உரிமைகள் பேணிப் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யக்கூடியதாக புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் வரையப்படும் வரை தற்போதைய பயங்கரவாத தடைச்சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் முழு அளவிலான முடக்கத்தை (Moratorium) செய்யவேண்டும்.

பயங்கரவாதத்துக்கு எதிரான அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வந்த இலங்கையின் வரலாற்றினதும் அமைதி வழிப் போராட்டங்களை ஒடுக்குவதற்கு தற்போதைய அரசாங்கம் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளினதும் வெளிச்சத்திலேயே புதிய சட்டமூலத்தை நோக்க வேண்டியது அவசியமாகும். இத்தகைய துஷ்பிரயோகங்களுக்கு வாணிப முன்னுரிமைகள் மற்றும் ஆதரவு மூலம் 'வெகுமதி' வழங்கப்பட மாட்டாது என்பதை இலங்கைக்கு அதன் சர்வதேச பங்காளிகள் தெட்டத் தெளிவாக உணர்த்த வேண்டும்'' என்று மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் தெற்காசிய பணிப்பாளர் மீனாக்சி கங்குலி அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

அதேவேளை, சட்டமூலம் வரவேற்கத்தக்க சில புதிய பாதுகாப்பு செயன்முறைகளை உள்ளடக்கியிருப்பதை அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. பொலிசாருக்கு அளிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் சான்றாக முன்வைக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படப் போவதில்லை. பெண் சந்தேகநபர்களை பெண் அதிகாரிகளே சோதனை செய்ய வேண்டும். கைதுக்கான காரணத்தை கூறுவதை வலியுறுத்தும் புதிய நடைமுறையும் உள்ளது. தங்களால் விளங்கிக் கொள்ள முடியாத மொழியில் இருக்கக் கூடிய ஆவணத்தின் மொழிபெயர்ப்பை சந்தேகநபர்களினால் பெற்றுக் கொள்ளமுடியும். தடுப்புக்காவலில் உள்ள நபர்களை 14 நாட்களுக்கு ஒரு தடவை மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்ப்படுத்த வேண்டும். கைதி சித்திரவதை செய்யப்பட்டிருப்பதாக தோன்றினால் மாஜிஸ்திரேட் பின்பற்றவேண்டிய நடைமுறைகளையும் சட்டமூலம் விளக்கியிருக்கிறது.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.


## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க...
விற்க...
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6

RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)

TAX CENTRIC
Gayatiri Thavan
Tel: 289.569.0169 • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
www.taxcentric.ca
2338 HURONTARIO ST., UNIT 100A,
MISSISSAUGA, ON L5B 1N1
உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
Tel: 289.569.0169
Servicing Clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph
- Personal Tax
- Corporate Tax
- Book Keeping & Accounting
- Payroll Services
- GST/HST Filing
- Corporate Services
- Business Startup
- Financial Planning

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*



RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599* FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500

உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும் சுயதொழில் செய்வோருக்கும் மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல் மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக் காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.

